Registered as a news paper. இலவசப் பிரதி பக்கங்கள்: பத்து விலை: ரூபா 6.00

# நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்


SCS Soft View Computer Systems
For all your Computer Requirements
Computer Assembling & Sales
Maintenance, Repairing & Networking
Monitors, Printers, Scanners & UPS Repairing
Software Installations
CD Writing & Printing
No.778, Thaddatheru Junction, K.K.S Road, Jaffna, Sri Lanka
☎ 021-2225170


மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2033 கார்த்திகை 17 ஆம் நாள், ஹிஜ்ரி 1423 றமழான் 27 (03.12.2002) செவ்வாய்க்கிழமை இதழ் : 63




### காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தின்

# மறியற் போராட்டத்தினால் செயலிழந்தது யாழ். செயலகம்!

(யாழ்ப்பாணம்)

காணாமற்போனோர் பாதுகாவலர் சங்கத்தினர் காணாமற்போன தமது உறவுகளின் உண்மை நிலையை அரசு வெளிப்படுத்த வேண்டும் எனக் கோரி, நேற்றுக் காலையிலிருந்து யாழ். அரச செயலகத்திற்கு முன்பாக மறியற் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர். இவர்களின் இம்மறியற்போராட்டத்தினால் நேற்று யாழ். செயலகம் முற்றாக ஸ்தம்பிதமடைந்து காணப்பட்டது. யாழ். செயலக வாசலில் மறியற்போராட்டத்தில் ஈடுபட்டிருப்போர் - செயலகத்திற்குள் செயலக ஊழியர்கள், அதிகாரிகள், என அனைவரையும் உட்செல்ல விடாது மறியல் போராட்டத்தில் ஈடுபட்டனர். இதனாலேயே நேற்று யாழ். அரச செயலகம் ஸ்தம்பிதமடைந்தது.


காணமறபோனோர் தொடர்பான உண்மை நிலையை அரசு வெளிப்படுத்தும்வரை போராட்டத்தைத் தொடர்ந்து நடாத்துவதற்கும் தீமானிக்கப்பட்டுள்ளது. தமது போராட்டத்திற்கு மக்களும் பொது அமைப்புக்களும் ஆதரவளிக்க வேண்டுமென போராட்டத்தில் ஈடுபடுவோர் கோரியுள்ளனர்.

☆ யுத்தநிறுத்த உடன்படிக்கை ☆ மீள் குடியேற்றம் ☆ தீர்விற்கான அரசியல் திட்டம்

# மூன்றாவது சுற்றுப் பேச்சுக்கள்

# ஒஸ்லோவில் நேற்றிரவு ஆரம்பம்

### விண்ணாணம் விநாசியர்



கடலுக்குப் போகவும் கட்டித் தழுவித்தான் அனுப்புவினம் போல...

## ஐரோப்பாவில் நடைபெறும் முதற் சந்திப்பு

(ஒஸ்லோ)

**அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான மூன்றாம் சுற்று சமரசப் பேச்சுக்கள் நேற்றிரவு ஒஸ்லோவின் ரடிசன் எஸ்.ஏ.எஸ். பிளாசா ஹோட்டலில் ஆரம்பமானது. நேற்றைய பேச்சுக்களில் யுத்தநிறுத்த உடன் படிக்கை, மீள்குடியேற்றம், பொருளாதார அபிவிருத்தி, இனப்பிரச்சனைத் தீர்விற்கான அரசியல் திட்டம் என்பன குறித்துப் பேசப்பட்டதாக நோர்வே வெளியுறவு அமைச்சின் அதிகாரிகள் தெரிவித்தனர்.**

அரசாங்கத் தரப்பில் - அமைச்சர்கள் ஜீ.எல்.பீரிஸ், மிலிந்த மொறகொட, சமாதானச் செயலகத்தின் பணிப்பாளர் பேணாட் குணதிலக ஆகியோரும் -

விடுதலைப் புலிகள் தரப்பில் கலாநிதி பாலசிங்கம், அடேல் பாலசிங்கம், சு.ப.தமிழ்ச்செல்வன், கேணல் கருணா, ஜோய் மகேஸ்வரன், உருத்திரகுமாரன் ஆகியோரும் பங்குபற்றினர்.

நேற்றைய பேச்சுக்களில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமிற்குப் பதிலாக அக்கட்சியின் ஆலோசகர் எம்.ஐ.எம்.முஹைதீன் பங்குபற்றினார். கட்சிக்குள் எழுந்துள்ள பூசல்களையடுத்து ஹக்கீம் அவசரஅவசரமாக ஒஸ்லோவிலிருந்து புறப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



நேற்றைய பேச்சுக்களின் ஆரம்பத்தில் பாலா - பீரிஸ்

# குருநகர் பகுதியில் கட்டுப்பாடுகளை தளர்த்தப் படைத்தரப்பு மறுப்பு

(யாழ்ப்பாணம்)

குருநகர் கரையோரப் பகுதிகளையும் சீநோர் தொழிற் சாலையையும் அமைச்சர் மகேஸ்வரன் நேற்றையதினம் பார்வையிட்டார்.

நேற்றையதினம் காலை 11.30 மணியளவில் குருநகர் இறங்குதுறைக்கு விஜயம் செய்த அமைச்சர் மகேஸ்வரன் குருநகர் இறங்குதுறை, குருநகர் கடற்பரப்பு மற்றும் குருநகரில் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வீடுகள், ஆலயங்கள் என்பவற்றையும் பார்வையிட்டார்.

பின் குருநகர் இறங்குதுறையிலிருந்து கரையோர இராணுவத் தளபதிகளையும் பிரிகேடியர் ரி.ரி. சில்வாவையும் அழைத்து அமைச்சர் மகேஸ்வரன் கலந்துரையாடல் நிகழ்த்தினார். இக்கலந்துரையாடலின்

(10 ஆம் பக்கம் பார்க்க)



புலிகள் தரப்புப் பிரதிநிதிகள்



கடற்தொழிலுக்குச் செல்லும் போதும் தொடரும் சோதனை

## இன்னும் பல சுற்றுக்கள் பேச்சு நடத்த வேண்டும்!

### நோர்வே வெளியுறவு அமைச்சர்

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் மேலும் பல சுற்றுப்பேச்சுக்களை நடத்த நேரிடும் என்று நோர்வே வெளிவிகார அமைச்சர் பீட்டர்ஸன் தெரிவித்துள்ளார்.

தாய்லாந்தில் இடம்பெற்ற இரண்டு சுற்றுப் பேச்சு வார்த்தைகளும் வெற்றிகரமாக முடிவடைந்ததுடன், மிகுந்த நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

நோர்வே NRK வானொலிக்கு நேற்றைய மூன்றாம் கட்டப் பேச்சுக்கள் தொடர்பாக வழங்கிய பேட்டியிலேயே, அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.



அரச தரப்புப் பிரதிநிதிகள்


SERENDIB
எமது முகாமைத்துவம் உள்நாட்டில் மட்டுமல்ல, சர்வதேசத்திலும் உள்ளது!
விமான சேவை
J/FT/P - 021 - 2223916, 0777 - 801038,
(சி-148) CMB 505632 - 390128 - 0777-517019



# வெளிவந்துள்ளது!

கே.ரீ.கணேசலிங்கத்தின்

**மாறிவரும் புதிய உலக ஒழுங்கு**

(புவிசார் அரசியல் நோக்கு)

சமகால உலக தரிசனத்தினையும் இலங்கையின் சமாதானச் சூழலையும் நோக்கும் ஆய்வு நூல்.

விலை **150/=** கிடைக்கும் இடங்கள்

- சிறிலங்கா புத்தகசாலை 234, கே.கே.எஸ். றோட், யாழ்ப்பாணம்.
- வசந்தம் புத்தக நிலையம், 405, ஸ்ரான்லி றோட், யாழ்ப்பாணம்.

(சி-257)


## ஹாட்லிக் கல்லூரி அதிபராக பத்மநாதன்

பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரியின் அதிபராக எஸ்.பத்மநாதன் இம்மாதம் முதல் நியமிக்கப்பட்டுள்ளார்.

கல்லூரியின் அதிபராகவிருந்த ஸ்ரீபதி வலயத்திணைக்களத்திற்கு இடமாற்றம் செய்யப்பட்டதையடுத்து இவர் நியமிக்கப்பட்டுள்ளார். ஹாட்லிக் கல்லூரி அதிபராக நியமிக்கப்பட்டுள்ள எஸ்.பத்மநாதன் முன்னர் பருத்தித்துறை சித்தி விநாயகர் வித்தியாலயத்தில் கடமையாற்றியவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ச)

## சுகாதார போதனா பயிற்றுநருக்கான செயலமர்வு

ஜீ.ரீ.இசற் நிறுவனத்தால் தென்மராட்சிக் கல்வி வலய முதனமைப் பயிற்றுநர்களுக்கான - சுகாதாரப் போதனாக்கம் பற்றிய செயலமர்வு டிசம்பர் 14ஆம் திகதி தொடக்கம் சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் நடாத்தப்படவுள்ளது.

சுகாதாரமும் போசாக்கும் பற்றி பாடசாலை ஆசிரியர்களைப் பயிற்றுவிக்கத் தெரிவு செய்யப் பட்ட முதன்மைப் பயிற்றுநர்களுக்கே இச்செயலமர்வு நடாத்தப்படவுள்ளது. (25,34,29)

## சந்நிதியான் ஆச்சிரமத்தில்

தொண்டமானாறு செல்வச் சந்நிதி முருகன் ஆலய சந்நிதி யான் ஆச்சிரமத்தில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு கவிமணி க.ஆனந்தராசா 'பாட்டும் பயனும்' என்ற பொருளில் சொற்பொழிவு ஆற்றுவார். (ச)

## பொன்னாலை வயல்களில் கட்டாக்காலி மாடுகள்!

(சுழிபுரம்)

பொன்னாலைப் பிரதேசத்தில் கட்டாக்காலியாகத் திரியும் மாடுகளால் அப்பகுதி வயல்வெளிகளில் உள்ள நெற்பயிர்கள் அழிக்கப்பட்டு வருகின்றன.

கடற்படையினரின் கட்டுப்பாட்டு பகுதியில் உள்ள கட்டாக்காலி மாடுகள், இரவு நேரங்களில் பயிர்களை மேய்ந்து விடுவதாகவும், இது தொடர்பாக அப்பகுதி கிராம அலுவலரிடம் முறையிட்டுள்ள போதிலும் இவற்றைக் கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படவில்லை.

கடற்படையினரால் தமது பிரதேசத்தைச் சுற்றி இடப்பட்டிருந்த முட்கம்பி வேலி தற்போது சீரற்று இருப்பதனாலேயே மாடுகள் வயல் வெளிகளில் நுழைவதாக விவசாயிகள் கவலை தெரிவித்துள்ளனர். (39)

# யாழ்ப்பாணம் - மாநகரசபை

## சந்தைகள், இறைச்சிக் கடைகள், சந்தைக் கடைகள், மற்றும் விளம்பர சேவைகளை 2003 ஆம் ஆண்டுக்கான குத்தகைக்கு வழங்குவதற்கான

# மீள் கேள்வி அறிவித்தல் - 2003

கீழ்க்காணப்படும் சந்தைகள், இறைச்சிக்கடைகள், சந்தைக்கடைகள் மற்றும் விளம்பர சேவைகள் ஆகியவற்றை 01.01.2003 ஆந் திகதி முதல் 31.12.2003 ஆந் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு வழங்குவதற்கான மீள் கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப்படிவம் வழங்கும் இறுதித் திகதி - 12.12.2002ந் திகதி வியாழக்கிழமை பி.ப. 3.00மணி வரை.
கேள்விகள் ஏற்றுக்கொள்ளும் இறுதித்திகதி - 13.12.2002ந் திகதி வெள்ளிக்கிழமை பி.ப. 12.30மணி வரை.
கேள்விகள் திறக்கும் திகதி - 13.12.2002ந்திகதி பி.ப. 2.30மணிக்கு

## மீள் கேள்வி அறிவித்தல்-01

விபரம் வருமாறு

| சந்தைகள் | | கேள்விப் பிணைப்பணம் | பெறுமதி சேர் வரி நீங்கலாக ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக் குறைந்த கேள்வி |
|---|---|---|---|
| 1. பாசையூர் சந்தை | | 2,500/= | 40,000.00 |
| 2. புங்கன்குளம் சந்தை | | 2,500/= | 15,000.00 |
| **இறைச்சிக்கடைகள்** | | | |
| 1. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | இல.2 | 2,500/= | 37,000.00 |
| 2. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | இல.3 | 2,500/= | 39,700.00 |
| 3. கொட்டடி ஆட்டிறைச்சிக்கடை | இல.7 | 2,500/= | 40,900.00 |
| 4. குருநகர் ஆட்டிறைச்சிக்கடை | இல.7 | 2,500/= | 9,000.00 |
| 5. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.4 | 2,500/= | 8,000.00 |
| 6. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.5 | 2,500/= | 9,000.00 |
| 7. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.7 | 2,500/= | 9,700.00 |
| 8. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.8 | 1,500/= | 5,500.00 |
| 9. நாவாந்துறை மாட்டிறைச்சிக்கடை | இல.9 | 1,500/= | 5,500.00 |
| 10. நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.11 | 1,000/= | 3,500.00 |
| 11. நாவாந்துறை கருவாட்டுக்கடை | இல.12 | 1,000/= | 3,500.00 |

## மீள் கேள்வி அறிவித்தல் -02

குருநகர் சந்தைக்கடைகள் விபரம்.

| கடை இல. | அமைந்திருக்கும் இடம் | கேள்விப்பத்திர கட்டணம் | கேள்விவைப்பு கட்டணம் | மாத வாடகை | ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை (பெறுமதி சேர் வரி நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| 08 | குருநகர் | 500/= | 5,000/= | 300/= | 72,000/= |
| 10 | குருநகர் | 500/= | 5,000/= | 300/= | 72,000/= |
| 11 | குருநகர் | 500/= | 5,000/= | 300/= | 72,000/= |
| 24 | குருநகர் | 500/= | 5,000/= | 300/= | 72,000/= |

## கேள்வி அறிவித்தல் - 03

### விளம்பரசேவை நடாத்துவதற்கான கேள்வி அறிவித்தல் ~ 2003.

கீழ்க்காணப்படும் நிபந்தனைகளுக்கமைவாக யாழ்.மாநகர சபையின் நவீன சந்தையில் அமைந்துள்ள கடை இல.167 ஐ 01.01.2003 ஆந் திகதி முதல் 31.12.2003 வரை தற்காலிக குத்தகைக்கு வழங்குவதற்கான கேள்விகள் கோரப்படுகின்றன.

கேள்விப் படிவக்கட்டணம் ரூ. 300/- (பெறுமதி சேர் வரி உட்பட)

ஏற்றுக்கொள்ளக்கூடிய ஆகக்குறைந்த கேள்வித்தொகை ரூபா 165,000/=

கேள்விப்படிவங்கள் வழங்கும் இறுதித்திகதி - 12.12.2002 ஆந் திகதி
கேள்விப்படிவம் ஏற்கும் இறுதித்திகதி - 13.12.2002 ஆந் திகதி
கேள்விகள் திறக்கும் திகதி - 13.12.2002 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பி.ப 2.30 மணிக்கு

நிபந்தனைகளில் பின்வருவனவும் அடங்கும்

1. சபையால் விதிக்கப்படும் சட்டதிட்டங்களுக்கு அமைவாக விளம்பரசேவை நடாத்தப்படுதல் வேண்டும்.
2. குறித்த நிலையத்திற்கான மாதாந்த வாடகை ரூபா 950/= வும் அதற்கான பெறுமதிசேர் வரியும் சேர்த்து ஒவ்வொரு மாதமும் 10 ஆம் திகதிக்குள் செலுத்தப்படல் வேண்டும். தவறின் வாடகைத் தொகையில் 10% தண்டம் அறவிடப்படும்.
3. குறித்த விளம்பர சேவைக்கான ஒப்பந்தம் 31.12.2003ஆம் திகதியுடன் முடிவுறுத்தப்படும்.
4. காவற்றுறையினரின் அங்கீகாரம் பெற்ற பின்பே விளம்பர சேவை நடாத்தப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை அலுவலகத்தில் அறிந்து கொள்ளலாம்.

*மாநகரசபை அலுவலகம்,*
*யாழ்ப்பாணம்.*
*2002.12.02*

இ.இராமலிங்கம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

(சி-256)


**நிறஞ்சனாஸ்** சங்கானை

இன்று முதல் வண்டமி நடித்த

**BLACK EAGLE**

11.00, 2.45, 6.00, 7.45
6ஆம் திகதி முதல்
நேருக்கு நேர்

(சி-187)

**ராஜா** யாழ்ப்பாணம்.



நான்காவது வாரமாக
அஜித் (இரட்டை வேடம்)
கிரண், மீனா நடித்த

**வில்லன்**

காட்சிகள்: 10.30, 2.30, 6.30 (பு.நே)
இயக்கம்: K.S.ரவிக்குமார்.

(சி-151)


# அறிவித்தல்

*வெளிவாரியாக பட்டச்சான்றிதழ் பெறும் மாணவர்கள்*

## கவனத்திற்கு

19.12.2002 இல் நடைபெறும் பட்டச்சான்றிதழ் வழங்கும் வைபவத்தின் பொழுது புகைப்படம் எடுப்பதற்கு 15.12.2002 இற்கு முன்னர் எமது அலுவலகத்தில் பதிந்து உறுதிப்படுத்துமாறு வேண்டுகின்றோம்.

**புதிய உயர் கல்லூரி**
வெளிவாரி பட்டப்படிப்பு மாணவர் ஒன்றியம்
ஆரியகுளம் சந்தி, யாழ்.

(054)


# வலி-மேற்கு வாழ் ஆங்கில பிரியர்களுக்கு

# ஓர் இன்ப அதிர்ச்சி!

அழகு தமிழைத் தாய்மொழியாகக் கொண்ட மாணவர்களுக்கு ஆங்கிலத்தைக் கற்பிக்கும் கலையின் காரணமாக மக்களின் மனங்களைக் கவர்ந்த "English Academy" 07.12.2002 முதல் சித்தங்கேணியிலும் (பாரதி கல்வி நிலையத்திற்கு முன்) தனது பாதங்களைப் பதிக்கவுள்ளது.

மாணவமணிகளின் மனங்களில் குடிகொண்டுள்ள "ஆங்கிலம்" என்ற அச்சத்தை அகற்றி, அதில் அடைவு மட்டத்தை உயர்த்துவதே எமது தலையாய நோக்கம். இதற்கு அனைவரது ஒத்துழைப்பையும் அவாவுடன் எதிர்பார்ப்பதுடன் பெறுமதிமிக்க விமர்சனங்களையும் மனமுவந்து வரவேற்கின்றோம்.

தரம் 6 முதல் A/L, பல்கலை மற்றும் அலுவலர் வரை நாளை தொடக்கம் காலை 10 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை பதிவுகளை மேற்கொள்ளலாம்.

**English Academy**
E.Mail: thangan 672002 @ Yahoo. Com
T.P 021-2222588

210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். — கிளை: சித்தங்கேணி

*Director* S.சிவச்செல்வன் — *Teacher* K.T.ராஜா (SS)

*Why Fear! We are here!* யாமிருக்கப் பயமேன் (சி-252)


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்

## *உயர் பட்டப் படிப்புக்கள் பீடம்*

### பட்டப்பின் கல்வித் தகைமைக் கற்கைநெறி (பகுதி நேரம்) - 2002/2004

(வவுனியா வளாகம்)

மேற்படி கற்கைநெறிக்கான ஆரம்ப வைபவம் 05.12.2002 வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிக்கு வவுனியா வளாகத்தில் ஆரம்பமாகின்றது. தெரிவு செய்யப்பட்டுள்ள மாணவர் அனைவரும் கலந்து கொள்ள வேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகின்றனர்.

மேற்படி கற்கை நெறிக்கு தெரிவு செய்யப்பட்டோருக்கு கடிதங்கள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

பதிவாளர்,
யாழ்.பல்கலைக்கழகம்.
02-12-2002.

(சி-253)

# இந்திய வெளியுறவு அமைச்சர் இம்மாதம் இலங்கை வருவார்

## மிலிந்தவின் டில்லி விஜயத்தை அடுத்து முடிவு

(கொழும்பு)

இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜஸ்வந்த் சின்ஹா இந்த மாதம்



இலங்கைக்கான விஜயத்தை மேற்கொள்வார் என அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் ஜஸ்வந்த் சின்ஹாவை அண்மையில் அமைச்சர் மிலிந்த சந்தித்துப் பேசியபின்னர், அவர் இலங்கைக்கு இம்மாதம் விஜயம் செய்வது குறித்து முடிவு செய்யப்பட்டுள்ளது. இம்மாதம் இடம பெறவுள்ள இந்த விஜயத்துக்கான ஏறபாடுகள், திகதி நிர்ணயம் குறிதது ஆலோசனைகள் இடம்பெற்று வருவதாகவும் அமைச்சர் மிலிந்த மொறகொட தெரிவித்துள்ளார்.

மேலும், இந்தியாவுடனான விசேட உறவு தொடர்ந்து பேணப்படுகிறது. இதனடிப்படையிலேயே இந்திய விஜயம் இடம்பெற்றது. பேச்சுக்களில் படிப்படியான அணுகுமுறைகளை நாம் கடைப்பிடிக்கிறோம்.

பிரச்சினைக்குத் தீர்வுகாணும் விடயத்தில் இந்தியா பூரண ஆதரவளிக்கின்றது. ஒஸ்லோ மாநாட்டில் இந்



தியா கலந்துகொள்ளாதது முக்கியமான தொன்றல்ல. ஊடகங்கள்தான் இதனைப் பெரிய விடமாக்கியுளளன என்றும் அமைச்சர் மிலிந்த மொறகொட மேலும் தெரிவித்துள்ளார்.

# இராணுவத்தில் சேர்வதற்கு ஆர்வம் குறைகின்றதாம்

## இராணுவ அதிகாரி கூறுகின்றார்

(கொழும்பு)

இராணுவத்தில் சேர்வதற்கு சிங்கள இளைஞர்கள் காட்டி வந்த ஆர்வம் படிப்படியாகக் குறைந்து வருவதாக இராணுவ அதிகாரி ஒருவர் கருத்து தெரிவித்துள்ளார்.

கடந்த வருடத்தில் மட்டும் இராணுவத்தில் ஆட்களைச் சேர்ப்பதற்கான பிரசாரங்களை மேற்கொண்டதாகவும் மூன்று தடவைகளிலும் தாம் இம் முயற்சியில் தோல்வி கண்டதாகவும், மூவாயிரத்துக்கும் குறைவானோரையே திரட்ட முடிந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

இந்த நிலையினால் ஓய்வு பெற்றுச் செல்ல வேண்டிய நிலையுள்ள பலர், ஓய்வு பெற முடியாதிருப்பதாகவும் அவ்வதிகாரி மேலும் தெரிவித்தார்.

## ஐ.தே.க. ஆட்சி ஆரம்பித்ததிலிருந்து 934 கொலைகள்

(கொழும்பு)

2001 டிசம்பர் 5ஆம் திகதி தொடக்கம் 934 கொலைகளும், 3715 கொள்ளைகளும், 465 ஆட் கடத்தலும், 58 கப்பம் பெற்ற சம்பவங்களும் இலங்கையில் இடம் பெற்றுள்ளது என்று பொலிஸாரின் அறிக்கையில் இருநது தெரியவருவதாக அமைச்சர் ஜோன் அமரதுங்க தெரிவித்துள்ளார்.

## றமழான் தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹர் முடிவு | 5.00 |
| சுபஹ் | 5.15 |
| உதயம் | 6.36 |
| லுஹர் | 12.30 |
| அஸர் | 3.52 |
| மஃரிப் | 6.22 |
| இஷா | 7.36 |

# வேடர்களின் நலனுக்கு தனிக்கட்சி; பதிவு செய்யவும் நடவடிக்கை

வேடர்கள் தங்களுக்கென்று புதிய அரசியல் கட்சி ஒன்றை உருவாக்கியுள்ளதாக தேர்தல் ஆணையாளருக்கு அறிவித்துள்ளார்கள்.

'யக்ச நாக அபோர்ஜின்ஸ் சபை' என்ற பெயரிலே அந்தக் கட்சி உருவாக்கப்பட்டுள்ளது.

வேடர்களின் உரிமைகள், சுதந்திரம் போன்றவற்றை வென்றெடுப்பதற்கே கட்சி உருவாக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் ஏ.என்.ஜி.தேவநாயகம் தெரிவித்துள்ளார்.

சில காலத்துக்கு முன்பு தோதல் ஆணையாளருக்குப் பதிவு செய்யுமாறு ஆவணங்கள் அனுப்பி இருந்தும், அவரிடமிருந்து எந்த விதமான பதிலும் கிடைக்கவில்லை என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அம்பாறைக்கு அருகாமையில் உள்ள தம்பன, ஹெ்ன்னிகல, மகாஓயா பிரதேசங்களில் 500 வேடுவக் குடும்பங்கள் வாழ்ந்து வருவதாகவும் தெரியவருகின்றது.

# கிளிநொச்சி புனர் நிர்மாணத்திற்கு ஆறு வருட விசேட செயற்திட்டம்!

## 230 கோடி ரூபா தேவையென மதிப்பீடு

(கிளிநொச்சி)

கிளிநொச்சி மாவட்டத்தை அபிவிருத்தி செய்யவும், புனர்வாழ்வுப் பணிகளை மேற்கொள்வதற்கும் வசதியாக, புதிய செயற்திட்டம் ஒன்று உருவாக்கப்படவுள்ளது.

ஆறு ஆண்டுகளில் நிறைவு செய்யக்கூடிய வகையில் இத்திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இத்திட்டத்தின்படி கிளிநொச்சி மாவட்டத்தில் உள்ள அனைத்துத் துறைசார்ந்த விடயங்களும் கருத்தில் எடுக்கப்பட்டுள்ளது. பல்துறை சார்ந்த அபிவிருத்தி மற்றும் புனர்வாழ்வு செயற்திட்டமாகவே மேற்படி திட்டம் தயாரிக்கப்பட்டுளளது.

கல்வி, சுகாதாரம், மருத்துவம், குடிநீர் விநியோகம், மின்சாரம், நீர்ப்பாசனம், வீதி அபிவிருத்தி, தொலைத்தொடர்பு, வீடமைப்பு உட்பட அனைத்து திணைக்களங்களின் அபிவிருத்தியும் கருத்தில் எடுக்கப்பட்டுள்ளது.

துறைசார்ந்த அனைத்து விடயங்களையும் உள்ளடக்கிய ஒருங்கிணைந்த வகையிலான மேற்படி செயற்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுவதற்கு, சுமார் இருநூற்று முப்பது கோடி ரூபா தேவைப்படும் எனறு மதிப்பீடு செய்யப்பட்டுளளது.

(க,லி)

# சமாதானப் பேச்சுக்கள் குறித்து மகா நாயக்கர்களுக்கு ரணில் விளககம்

(கொழும்பு)

ஒஸ்லோவில் நடைபெறும் சமாதானப் பேச்சுவார்த்தைகள் குறித்தும், நடந்து முடிந்த உதவி வழங்கும் நாடுகளின் கூட்டம் தொடர்பாகவும் மகாநாயக்க தேரர்களுக்கு பிரதமர் ரணில் விக்கிரமசிங்க விளக்கமளித்துளார்.

நேற்று முன்தினம் காலை கண்டி தலதா மாளிகைக்கு சென்று பிரதமர் புனிதச் சின்னங்களை வழிபட்டிருந்தார். அதற்கு முன்னதாக தலதா மாளிகை தியவதன நிலமே நிரஞ்சன் விஜேரத்னவைச் சந்தித்துப் பேசிய பின்னர், மகாநாயக்கர்களுடன் அவர் பேச்சுக்களை நடத்தியிருந்தார்.

அஸ்கிரிய மகாநாயக்கர் உடுகம புத்திரகித்த தேரர், மல்வத்த மகாநாயக்கர் ரம்புக்வல ஸ்ரீ விபஸி நாயகக தேரர் ஆகியோரைத் தனித்தனியாகச் சந்தித்து பிரதமர் சமாதான முயற்சிகள் குறித்து விளக்கமளித்தார்.

ஒஸ்லோவில் நடைபெறும் சமாதானப் பேச்சுக்கள், நடைபெற்று முடிந்த உதவிவழங்கும் நாடுகளின் கூட்டத்தில் கிடைத்த நிதியுதவிகள் என்பன குறித்து மகாநாயக்கர்களுக்கு விரிவாக எடுத்து விளக்கப்பட்டது. இந்தச் சந்திப்பின்போது ஐ.தே.க. தவிசாளர் மலிக் சமரவிக்கிரமவும் பிரதமருடன் கூட இருந்தார்.

# கடற்படையினரால் கைது செய்யப்பட்ட 14 இந்திய மீனவர்களும் விளக்கமறியலில்

வடபகுதிக் கடலில் அத்துமீறி மீன்பிடித்தலில் ஈடுபட்ட பதின்நான்கு இந்திய மீனவர்கள் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காரைநகர் கடற்படையினர் நேற்று முன்தினம் தமது வழமையான ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த சமயம் மேற்படி இந்திய மீனவர்களை கைது செய்ததுடன் அவர்கள் பயன்படுத்திய நான்கு மீன்பிடிப்படகுகளையும் கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்ட மீனவர்கள் ஊர்காவற்துறை பொலிஸாரிடம் கையளிக்கப்பட்டனர். பின்னர் இவர்கள் ஊர்காவற்துறை நீதவானின் உத்தரவின் பேரில் எதிர்வரும் பதினோராம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

(க)

# போதைப் பொருள் கடத்தலில் முன்னாள் அதிரடிப்படையதிகாரி கனடாவிலிருந்து அனுப்புகிறாராம்!

(கொழும்பு)

விசேட அதிரடிப்படையின் முன்னாள் அதிகாரி ஒருவர் இலங்கைக்குப் போதைப் பொருட்களை கடததுவதில் முக்கிய பங்கு வகித்து வருவதாக பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்திருந்திருக்கின்றது.

அண்மையில் 18 கி.கி எடையுள்ள போதைப்பொருட்கள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது தொடர்பாக நடத்தப்பட்ட விசாரணையிலேயே இது தெரியவந்துள்ளது. அதிரடிப்படையில் சப் இன்ஸ்பெக்டராக கடமையாற்றிய இந்த அதிகாரி தற்போது கனடாவில் வசித்து வருவதாகவும் அவரே இலங்கைக்கு போதைப்பொருட்களைக் கடத்தி வருவதாகவும் பொலிஸார் கூறியுள்ளனர்.

அண்மையில் பெருமளவிலான போதைப்பொருட்கள் கைப்பற்றப்பட்டது தொடர்பாக கைதுசெய்யப்பட்ட முன்னாள் பொலிஸ் சார்ஜன்ட், கனடாவிலுள்ள முன்னாள் அதிரடிப்படை அதிகாரியின் உறவினர் எனவும் கூறப்பட்டுள்ளது.

## உதைபந்தாட்ட போட்டிகள

யாழ்.உதைபந்தாட்ட லீக் நடத்தும் நொக் அவுட் முறையிலான உதைபந்தாட்டப் போட்டித் தொடரில் 'ஏ' பிரிவில் சென். மேரிஸ் - அரியாலை அணிகளுக்கிடையிலான போட்டி இன்று பி.ப.3.45 மணிக்கும், 'பி' பிரிவில் ஆனைக்கோட்டை யூனியன் அணிக்கும் கலைவாணி அணிககும் இடையிலான போட்டி மாலை 5 மணிக்கும் உரும்பிராய் இந்துக் கலலூரி மைதானத்தில் நடைபெறும்.

## இத்தாலிக்குச் செல்லும் வழியில்

# 70 இலங்கையருடன் நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருக்கும் படகு!

நீர்கொழும்பில் இருந்து இத்தாலிக்கு 70 சட்ட விரோத குடியேற்றக்காரர்களை ஏற்றிச் சென்ற படகு ஒனறு நடுக்கடலில் தத்தளித்துக் கொண்டிருப்பதாகத் தெரியவருகின்றது.

நீர் கொழும்பில் இருந்து சுமார் இரண்டு மாதங்களுக்கு முன்னர் இப்படகு புறப்பட்டது. எகிப்தின்-கெய்ரோவுக்கு அண்மையில் நடுக்கடலில் இயந்திரக் கோளாறு ஏற்பட்டுள்ளதால் இப்படகு தத்தளித்துக் கொண்டிருக்கின்றது.

இது தொடர்பாக இப்படகில் இருந்து தொலைபேசிச் சமிக்ஞைகள் வேறு படகுகளுக்குக் கிடைத்துள்ளதாகவும் கூறப்படுகின்றது. படகில் உள்ள 70 இலங்கையர்களையும் காப்பாற்ற இதுவரை எந்த நடவடிக்கைகளும் எடுக்கப்படவிலலை.

இதேவேளை இப்படகில் இருநது மரணமான ஒருவரின் சடலம் பல நாட்களாக பாதுகாக்கப்பட்டிருந்த பின்னரும், படகு கரைசேர முடியாததால் கடலில் அது வீசப்பட்டு விட்டதாகவும் தெரியவருகின்றது. நடுக்கடலில் தத்தளித்துக் கொணடிருக்கும இப்படகை மீட்க நடவடிக்கை எடுக்காவிட்டால் எகிப்திய அதிகாரிகளால் படகு கைப்பற்றப்படும் நிலை ஏற்படலாம் என்வும் தெரிவிக்கப்படுகின்றது.

# தமிழ்ச்செல்வனைக் கைது செய்ய பொலிஸ் நடவடிக்கை எடுக்கவில்லை


## சிஹல உறுமய குற்றச்சாட்டு

(கொழும்பு)

விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் அலரிமாளிகையில் பிரதமருடன் பேச்சு நடத்திக்கொண்டிருந்தபோது பொலிஸார் அவரைக் கைதுசெய்ய நடவடிக்கை எடுக்கவில்லை என சிஹல உறுமய குற்றஞ்சாட்டியுள்ளது.

கில்தா பெர்னான்டோ என்பவர் பொலிஸ் நிலையத்தில் இது குறித்து முறைப்பாடு செய்தபோது, பொலிஸ் அதிகாரி ஒருவர் தாம் தமிழ்செல்வனைத்தான் கைது செய்யப்போய்க் கொண்டிருப்பதாகக் கூறினார் என்றும் ஆனால் அவ்வாறு எதுவும் நடக்கவில்லை என்றும் சிஹல உறுமய கூறியுள்ளது.

இதேவேளை, நோர்வேத் தூதுவர் வெஸ்ட்பேர்க் புலிகளுக்கு அடைக்கலம் கொடுத்துவருவதாகவும் சிஹல உறுமய கூறியுள்ளது.



யாழ்.இலக்கிய வட்டம் அண்மையில் கைலாசபதி அரங்கில் 'சுதந்திரன் சிறுகதைகள்' நூலையும் ஏனைய பத்து நூல்களையும் வெளியிட்டது. அதில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட பேராசிரியர் நந்தி, அந்நூல்களில் முதற்பிரதிகளை கட்டைவேலி - நெல்லியடி ப.நோ.கூ. சங்கத் தலைவர் எஸ்.சிதம்பரப்பிள்ளையிடம் வழங்குகிறார்.

# இன்றைய சர்வதேச அரசியலரங்கில் சமஷ்டிகளின் பிரிந்து செல்லும் உரிமை!

## சுயநிர்ணயம் ஓர் பார்வை

பகுதி - 10

வேலும்மயிலும் சேந்தன்

இவ்வாரம் கட்டுரைத் தொடரில் சமஷ்டி முறைமைக்குள் இருக்கும் அரசுகள், தாம் விரும்பும் சந்தர்ப்பத்தில் பிரிந்து செல்வது பற்றிய விடயத்தினை **(Right of secession)** நோக்குவதாக கடந்த வாரம் கூறியிருந்தோம்.

அந்த வகையில் - சமஷ்டி முறைமையில் பிரிந்து செல்லும் உரிமை- சமஷ்டியின் ஆரம்பகாலம் முதல் இன்றுவரை சர்ச்சைக்குரியதாகவே தென்படுகின்றது. மேலும், சமஷ்டி அரசுகள் பிரிந்து செல்வதற்கான கோரிக்கைகள் எவ்வாறு மேற் கிளம்புகின்றன என்ற அடிப்படையில் விடயங்களை ஆராய்வது - அவ்வப்போது அந்தந்த காலத் தேவைகளின் அடிப்படையிலானதாகும்.

குறிப்பாக- சமஷ்டி முறைமை, மத்திய மாநில அமைப்புக்கள் தமக்கிடையேயான அதிகார உறவுகள் - எவ்வாறான முறைமையில் நிர்வகிக்கப்படுகின்றன என்பதிலேயே தங்கியுள்ளது. எவ்வித பாரபட்சமும் இன்றி - மாநில அரசுகளின் வேற்றுமைகளை, அவற்றின் பன்மைத்துவத்தினை அங்கீகரித்து, தம்மிடையே ஒற்றுமையினை பேணியவாறு பாதுகாப்பு மற்றும் பொருளாதாரவிருத்தி என்பவற்றில் கூடுதலான அக்கறை செலுத்துவதாக அமைந்தால் சமஷ்டி முறைமை பாதுகாக்கப்படும். மத்திய அரசிற்கு, மாநில அரசு பயந்து நடக்க வேண்டிய நிலைமை காணப்படுமாயின்- அது காலவோட்டத்தில் பிரிவினை ஏற்படுவதற்கான சாத்தியங்களை ஏற்படுத்தும் என்பது திண்ணம்.

இன்று நடைமுறையிலுள்ள சமஷ்டி முறைமைகளில் - அமெரிக்கா, அவுஸ்ரேலியா, கனடா, சுவிற்சலாந்து ஆகிய நாடுகளின் சமஷ்டி யாப்புக்களில், பிரிந்து செல்லும் உரிமை கிடையாது. அமெரிக்காவில் பிரிந்து செல்வதற்குரிய உரிமை கிடையாது என்பது 1861 - 1865 வரைக் காலப்பகுதியில் தீர்மானிக்கப்பட்டது. இக்காலப்பகுதியில் அமெரிக்காவின் தென்மாநிலங்கள், தமது பொருளாதார விருத்தியின்மையின் காரணமாகப் பிரிந்து செல்வதற்காக உள்நாட்டு யுத்தத்தில் ஈடுபட்டபோதும், யுத்தம் தோல்வியடைந்தமையால் மாநிலங்கள் பிரிந்துசெல்லும் உரிமை வழங்கப்படமாட்டாது என்பது 1865 களுடன் தீர்மானிக்கப்பட்டுவிட்டது.

அதேபோல் 1848 இல் சுவிற்சலாந்தில் நிகழ்ந்த உள்நாட்டுப் போர், மாநிலமொன்று சமஷ்டியிலிருந்து விலக முடியாது என்பதனை நிரூபித்தது. மேலும், 1932 இல் அவுஸ்ரேலியாவிலிருந்து அதன் மேற்கு மாநிலம் பிரிந்து செல்லும் உரிமை கேட்டபோது அது வழங்கப்படவில்லை.




ஆனால் இவற்றுக்கு மாறாக, சோவியத் யூனியன் தனது அரசமைப்பின் 35 ஆவது சரத்து விதிப்படி, சமஷ்டியில் இணைந்துள்ள குடியரசுகள் பிரிந்து செல்லலாம் என்ற உரிமை வழங்கப்பட்டிருந்தது. அவ்வாறு சோவியத் கட்டமைப்பினைக் கட்ட விழ்த்து, குடியரசுகள் 90களில் பிரிந்து சென்றதும் வரலாற்றின் நிகழ்வுகளாக இன்று உள்ளன.

இவ்வாறே 1966 இல் சிங்கப்பூர், 1971 பங்களாதேஷ் என்பவையும் நெதர்லாந்து, மேற்கிந்தியத் தீவுகளின் சமஷ்டி, மேற்காபிரிக்காவின் சமஷ்டி என்பன உடைந்தமைக்குத் தன்னிச்சையான பிரிவினையே காரணம்.

மேற்குறிப்பிட்டவற்றை அடிப்படையாகக் கொண்டு நோக்கும்போது, சமஷ்டி முறைமையில் குடியரசுகள் பிரிவதனை, பலத்தினால் மட்டுமே தவிர, வேறெந்த அரசியலமைப்பு விதியினாலும் அதனைத் தடுத்து நிறுத்த முடியாது என அரசியல் நிபுணர் லியகொக் **(Leacock)** குறிப்பிட்டுள்ளார். இந்த வகையில் நோக்கும்போது, சமஷ்டி முறைமை என்பது தெளிவாகப் பிரிந்து செல்வதற்கான உரிமையினைக் கொடுக்கின்றது என்றும் கூறிவிட முடியாது.

இந்த வகையில் சமஷ்டி முறையானது - பிராந்திய வேறுபாடுகள், சமச்சீரற்ற அபிவிருத்தி, வறுமை போன்ற அம்சங்கள் நிலைத்திருக்கும் நாடுகளில், இம்முறையினை அமுல்படுத்துவதில் மட்டுப்பாடுகள் இருப்பதாக சமஷ்டி பற்றிய அரசியல் அறிஞர்கள் கருத்து வெளியிட்டுள்ளனர்.

இதற்கான காரணங்களில் முக்கியமாக, இரண்டாம் உலக மகா யுத்தத்தின் பின்னர் உருவாகிய புதிய அரசுகள், சமஷ்டி முறையை பின்பற்ற இயலாது என லியகொக் போன்ற அறிஞர்கள் தெரிவித்திருந்தனர். இதற்கு அவர்கள் முன்வைத்த காரணங்கள் - புதிய அரசுகள தங்கள் "தேச நிர்மாணத்திற்கு", அதன் அபிவிருத்திக்கு உறுதியான முடிவுகளையும் தீர்மானங்களையும் எடுக்க மத்திய அரசிடம் கூடுதலான அதிகாரங்களைப் பேண வேண்டிய தேவை இருப்பதாகக் கருதப்பட்டது. அவ்வாறு கருதப்பட்டதாலேயே புதிய அரசுகளில் முழுமையான சமஷ்டி முறைமை என்றுமே பின்பற்றப்படவில்லை எனலாம்.

இந்தவகையில், நலன்பேண் அரசாங்கங்கள் எவற்றுக்கும், சமஷ்டி முறைமை பிரயோசனமற்றது என ஆரம்ப காலத்தில் விவாதிக்கப்பட்டது.

சர்வதேச அரசியல் - சோசலிஸ, முதலாளித்துவ முகாம்கள் என இரு பிரிவுகளாக இருந்தபோது, நடைமுறை ரீதியில், சமஷ்டி முறைமை பற்றிய சிக்கல்களை எதிர்நோக்க வேண்டியிருந்தது. மேற்படி முகாம்கள் தமது அரசியல் மற்றும் இராணுவ நலன்களுக்காக சமஷ்டியைக் குழப்ப முயன்றுள்ளதாக அவ்வப்போது குற்றச்சாட்டுக்களும் எழுந்தன. மத்திய - மாநில அரசின் உறவுகளில் குழப்பங்களை ஏற்படுத்தி பிரிவினைவாதப் போராட்டங்களைத் தோற்றுவிப்பதாகவும் எதிரணிகளின் செயற்பாடுகள் அமைந்தன. எனவே, இக்காலகட்டத்தில் வெளியுறவுக் கொள்கை தொடர்பான இறுக்கமான கொள்கையினைப் பின்பற்ற வேண்டிய நிர்ப்பந்தத்திற்கு மத்திய அரசு உருவாகியிருந்தது என்றால் அது மிகையல்ல.

குறிப்பாக, 90களில் சோவியத் கூட்டமைப்பு வீழ்ச்சியடைந்ததன் பின்னர், சர்வதேசிய அரசியல் அரங்கு வேறொரு வடிவத்தினை எடுத்துக் கொண்டது. இந்த வகையில், **NATO** அமைப்பைத் தனது இராணுவ வல்லாதிபத்தியத்திற்கான ஆயுதமாகக் கொண்டும், தேசிய எல்லைகள் கடந்த கம்பனியின் சந்தை விஸ்தரிப்பை தனது பொருளாதார வல்லாதிபத்தியத்தின் ஆயுதமாகக் கொண்டும் அமெரிக்கா உலகின் தலைவனாக விளங்க முயல்கிறது.

இந்நிலையில், அபிவிருத்தியடைந்த நாடுகளுக்கு மட்டுமே சமஷ்டி முறைமை பொருத்தமானது என்று காலம் காலமாக இருந்து வந்த கருத்தியல் இன்று மாற்றம் கண்டு வருகின்றது.

முரண்பாடுகளற்ற பிராந்தியங்களை உருவாக்க, சமஷ்டி முறைமையின் கீழ், உள்ளக சுயநிர்ணயம் இன்று வலியுறுத்தப்படுகின்றது. இதேவேளை, சமஷ்டி மீண்டும் ஒரு புதிய கட்டத்திற்கு அண்மைக்காலத்தில் அழைத்துச் செல்லப்படுகின்றது. - அதாவது "உலகமயமாதல்" என்ற வர்த்தக விஸ்தரிப்பினூடாக நிறைவான தேசியத்தினையும், அதற்கேயுரிய மொழி, வரலாறு என்பவற்றைக் கொண்டமைந்த நாடுகள் தாங்கள் சமஷ்டி முறைமையில் இணைவது பற்றித் தீவிரமாக சிந்தித்து வருகின்றன.

இந்த வகையில் - ஐரோப்பிய யூனியன் நாடுகள் தமக்கிடையே பூரண இறைமைகளை வைத்துக் கொண்டு, சமஷ்டி முறைமையின் கீழ் ஒன்றிணைந்து, தமது பொருளாதார நலன்களைப் பேணுவதற்கு ஆவன செய்கின்றன. இந்த மாதிரியான ஐரோப்பிய யூனியனது செயற்றிட்டமானது, எதிர்காலத்தில் பூரண இறைமையினைக் கொண்ட நாடுகள் தமக்கிடையே ஒருங்கிணைப்பினைத் தோற்றுவிப்பதற்கு சாத்தியமானதாகும்.

எனினும், இன்று சமஷ்டி முறைமைக்கு வரும் குடியரசுகள், தமக்கிடையே வலுவான அதிகாரங்களைச் சமாந்தரமாக - அதாவது, அதிகாரங்களை ஒரேயளவில் வைத்திருப்பதற்கான பலத்தை வேண்டி நிற்கின்றன. அவ்வாறான பலம் என்ன? அவற்றை எவ்வாறு பெற்றுக் கொள்வது? என்பது காலத்திற்குக் காலம், நாட்டிற்கு நாடு வேறுபட்டமையும்,

எனவே, இன்று சமஷ்டி முறைமையின் கீழ் பிரிந்து போவதென்பதற்குப் பதிலாக, சமஷ்டி முறையின் கீழ் பூரண சுயாட்சி அதிகாரங்களைப் பெற்றுக் கொள்ளக் கூடிய திட்ட வரைபுகளையும், தீர்மானங்களையும் அதன் ஆரம்பத்திலேயே வடிவமைத்துக் கொள்வதே சாலச் சிறந்ததென தேர்ச்சி பெற்ற அரசியல் வல்லுநர்கள் அழுத்தமாக எதிர்வு கூறுகின்றனர்.

(பிரதி செவ்வாய் தொடரும்)

---

## வடமராட்சி கிழக்கில்

# நெருப்புக் காய்ச்சல் பரவுகின்றது; 10 பேர் மந்திகை மருத்துவமனையில்!

(வடமராட்சி)

வடமராட்சி கிழக்குப் பகுதியில் நெருப்புக் காய்ச்சல் நோய் பரவ ஆரம்பித்துள்ளதாக வைத்தியசாலைப் பதிவேடுகளில் இருந்து தெரிய வந்துள்ளது.

வடமராட்சி கிழக்கிலுள்ள - குடத்தனை, செம்பியன்பற்று, தாளையடி, மருதங்கேணிப் பகுதிகளிலிருந்தும், பச்சிலைப்பள்ளிப் பகுதியில் இருந்தும் கணிசமான நோயாளர்கள் நெருப்புக் காய்ச்சல் நோயுடன் மந்திகை மருத்துவமனைக்குச் சிகிச்சைக்காக வந்துள்ளனர்.

விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதியில் இருந்து ஏ-9 வீதி வழியாக வந்து சிகிச்சை பெற்றுவரும் நோயாளிகள் பலத்த சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர். வடமராட்சி கிழக்குப் பகுதியில் போதிய வைத்திய வசதிகள் இல்லாமையால் நெருப்புக் காய்ச்சல் நோய் பரவும் அபாயம் தோன்றியுள்ளதாக வைத்திய சாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இப்பகுதிகளிலிருந்து 10 இற்கும் மேற்பட்ட நெருப்புக் காய்ச்சல் பீடிக்கப்பட்ட நோயாளிகள் மந்திகை மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். மேலும் பலர் தாளையடியில் உள்ள திலீபன் ஞாபகார்த்த மருத்துவமனையிலும் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

# புனர்வாழ்வுப் பணிகளில் பொருத்தமான செயற்திட்டங்களை வகுக்க ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

யாழ்.மாவட்டத்தில் இதுவரை மக்கள் மீளக்குடியமர அனுமதிக்கப்பட்ட பகுதிகளில் புனர்வாழ்வுப் மற்றும் புனரமைப்புப் பணிகளை மேற்கொள்வதற்கு பொருத்தமான செயற்திட்டங்கள் தயாரிக்கப்பட்டு வருகின்றன.

மேற்படி புதிய செயற்திட்டங்களைத் தயாரிப்பதில் யாழ்.செயலகம் ஈடுபட்டு வருகிறது. இவற்றை விட வெவ்வேறு பகுதிகளில், வேறுபட்ட வகையிலான செயற்திட்டங்கள் தேவையாக உள்ளன. எனவே, குறிப்பிட்ட பகுதிகளுக்கு அவசியமான, அல்லது பொருத்தமான செயற்திட்டங்களை அடையாளம் காணும்படியும், புதிய செயற்திட்டங்களை வரைபு செய்யும்படியும் யாழ். செயலகம் அனைத்துப் பிரதேச செயலகங்களையும் கேட்டுள்ளது. இது தொடர்பான பணிப்புரைகள் அனைத்து பிரதேச செயலகங்களுக்கும் ஏற்கனவே அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

புதிய செயற்திட்டங்களைத் தயாரிக்கும் போது பிரதேச ரீதியாக அமைக்கப்பட்ட நல்லிணக்கக் குழுக்களின் ஆலோசனையும் பங்களிப்பும் பெற்றுக்கொள்ளப்படவுள்ளது. (க)

---

## இன்றைய நாள் இனிய நாள்

### 03-12-2002 - செவ்வாய்க்கிழமை

**சித்திரபானு ஸ்ரீ, கார்த்திகை மாதம் - 17ஆம் திகதி**

*திதி* - அபரபட்ச சதுர்த்தி - பி.ப 3.44 வரை அதன் மேல் அமாவாசை
*நட்சத்திரம்* - விசாகம் - பகல் - 12.58 வரை அதன் மேல் அனுஷம்.
*ராகுகாலம்* - 03.15 - 04.45 *சுபநேரம்* - 10.45 - 12.15

**மேடம்** :- மன அமைதி குறைவு, வீட்டில் இருப்பது நன்று, உடனலக் குறைவு, தெய்வ வழிபாட்டில் ஈடுபடுவது நன்று, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**இடபம்** :- மனமகிழ்ச்சி, பெண்கள் குதூகலம், ஆடை அலங்கார மகிழ்வு, நாவிற்கு ருசியான உணவு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மிதுனம்** :- எதிரியின் மனவலிமை குன்றுதல், வங்கிக்கடன் வசதி, சேமிப்பு வசதி, தெய்வ வழிபாடு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கர்க்கடகம்** :- புத்திரர் அமைதி நிலை, பொதுச்சேவையில் பங்கு, தெய்வ வழிபாடு, சமயநூல் பாராயணம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபார முன்னேற்றம்.

**சிங்கம்** :- கொடுத்த பணம் வருவது தாமதம், வீட்டில் செலவு, வாகனச் செலவு, அலைச்சல், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கன்னி** :- உளவலிமை, செய்தொழில் முன்னேற்றம், மகிழ்ச்சி, ஆடை அலங்கார சிந்தை. கல்வியில் ஊக்கம் வேண்டும். வியாபாரச் சமநிலை.

**யாழ். கொக்குவில் இ.சி.இரகுநாதையர் அவர்களின் சகோதரரின் புத்திரர் இ.வெங்கடேச ஐயர்.**

**துலாம்** :- உடனலக்குறைவு, சேமிக்கும் சிந்தனை இராது, பெண்களினால் சண்டை, வாக்குவாதம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரச் சமநிலை.

**விருச்சிகம்** :- பணவரவு, தெய்வ தரிசனபலன், சமயநூல் பாராயணம், நண்பர்கள் உறவினர் தரிசனம், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

**தனு** :- மனத்தை ஒருநிலைப்படுத்தல் வேண்டும், வீண் செலவு, உடனலக்குறைவு, வாக்குவாதம், கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**மகரம்** :- நண்பர்கள், உறவினர் வருகை, நாவிற்கு ருசியான உணவு, பெண்கள் மகிழ்வு, தெய்வ வழிபாடு, கல்வி முன்னேற்றம், வியாபார முன்னேற்றம்.

**கும்பம்** :- செய்தொழில் முன்னேற்றம், பணவரவு, சமூகசேவையில் மதிப்பு, புகழ், கல்வியில் ஊக்கம் வேண்டும், வியாபாரம் சமநிலை.

**மீனம்** :- உடனலக்குறைவு, வைத்தியச் செலவு, எதிரியின் தொல்லை, பிதாவுடன் மனஸ்தாபம், கல்வியில் ஊக்கம் வேண்டும்,வியாபார முன்னேற்றம்.

பல்சுவை அரங்கு





# சிரிக்கவும் சிந்திக்கவும் வைத்த சார்லி சாப்ளின்

**அரங்கம் 09**



**1914** ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம சார்லியின் முதல் படம் திரையிடப்பட்டது. அது கால்மணி நேரம் ஓடிய, ஒரு ரீல் படம். 'மேக்கிங் எலிவிங்' என்று அதற்குப் பெயர். திரைப்படத்தைப் பற்றி இன்னமும் அதிகம் தெரியா விட்டாலும் சார்லிக்கு நகைச்சுவை புரிந்தது. அதோடு அந்தப் படத்தின் இயக்குநர் முழுதும் தகுதியற்றவர் என்பதும் புரிந்தது.

படத்தைப் பார்த்த சார்லிக்கு மிகவும் ஏமாற்றமாக இருந்தது. அவர் கூறியிருந்த மாற்றங்கள் எல்லாமே படத்தில் வெட்டப்பட்டிருந்தன.

இருந்தாலும் மக்களுக்கு அந்தப் படம் பிடித்திருந்தது. அவர்கள் சார்லியை- ப்ராக் மேலங்கியிலும், மேல் தொப்பியிலும் கண்டு கொண்டதோடு அவரை முதற்தர நகைச்சுவை நடிகராகவும் ஏற்றுக் கொண்டனர். ஏமாற்றங்கள், சார்லஸ் ஸ்பென்சர் சாப்ளினை எதிர்காலத்தில் சிறப்பாகச் செயற்பட உறுதிகொள்ளச் செய்தது.

அரங்க அமைப்புகளிலும் துணை நடிகர்களிலும் பணத்தைச் சேமிக்க சென்னேட்டுக்கு நிச்சயமாக ஒரு வழி இருந்தது. அவர் படக் குழுவுடன் அந்தப் பகுதியில் நடக்கும் ஏதாவது விழாவிற்குச் சென்று தன்னுடைய நடிகர்களை கூட்டத்தில் மக்களோடு மக்களாகக் கலந்து விடச் சொல்வார்.

சார்லினுடைய இரண்டாவது படம் சிறுவர்களுக்கான மோட்டார் கார் பந்தயத்தில் படமாக்கப்பட்டது. அவருக்கு ஒரு சீருடையைக் கொடுத்து அணியச் சொன்னார்கள். பிறகு பந்தயக் களத்தில் அவரால் முடிந்த தொல்லைகளைச் செய்யச் சொன்னார்கள்.

சற்று சின்னதாக இருக்கும் பந்து வீசுபவரின் தொப்பியையும், இறுக்கமான மேல் ஜக்கெட்டையும் அளவில் பெரிதான லோங்சையும், மிகவும் பெரிய ஷூக்களையும் போர்வீரரின் சின்னப்பிரம்பையும் அவர் தனக்கு உடையாகத் தேர்வு செய்தார். இத்துடன் திரையில் சிறிய நாடோடியின் முதல் பிரவேசம் நடந்தேறியது.

அந்தக் கதாபாத்திரம் அவ்வளவு புகழ் பெற்று நீடித்திருக்கும் என்பதை சார்லியே எண்ணியிருக்க மாட்டார். ஆனால் முதல் வினாடியிலிருந்தே அவருக்கு ஒரு நாடோடி எப்படிச் செயல்படுவான் என்று தெரிந்திருந்தது. அதிர்ஷ்டமேயில்லாமல், ஒருவித மதிப்புக்காகத் துணிந்து பாடுபடுவனாக தெரிந்தான் சார்லி.

தன்னுடைய இளமைக் காலத்தில், குமாஸ்தாக்கள், தங்கள் வறுமையை மறைத்து, மதிப்புடன் வாழ என்னவெல்லாம் செய்தார்கள் என்பதை நினைத்துப் பார்த்தார். அந்த வறுமையிலும் ஆண்களும், பெண்களும், குழந்தைகளும் தொப்பி அணிந்தது- அது எவ்வளவு மோசமானாலும்- அவர் நினைவுக்கு வந்தது.

கால் விரல்களை அகற்றில கால் அடிகளை உரசிக் கொண்டு நடக்கும் பாணியை, சிறுவயதில் தான் பார்த்த ஒரு குடிகாரனிடமிருந்து எடுத்துக் கொண்டதாக வெகு நாட்களுக்குப் பிறகு ஒரு பேட்டியில் கூறினார் சார்லி. தன் எல்லாத் திரைப்படங்களுக்கும் அந்த நினைவுக் களஞ்சியத்திலிருந்து பல விஷயங்களை எடுத்துக் கொண்டார்.


நாடோடியாகத் தன்னை வெளிப்படுத்திக் கொண்டாலும் இன்னும் பல படங்கள் கழித்துத்தான் அந்தக் கதாபாத்திரத்துக்கு பூரண வடிவம் கொடுக்க முடிந்தது. தற்காலிகமாக சார்லி எல்லாவிதமான கதாபாத்திரங்களிலும் நடித்துக் கொண்டிருந்தார். அவர் நன்றாக நடித்தாலும் மற்ற நகைச்சுவை நடிகர்களைப் போல் பத்தோடு பதினொன்றாகத்தான் தெரிந்தார். இந்த ஆரம்பப் படங்களில் எதிர்காலத்தில் அவர் படைப்புக்களில் தோன்ற இருந்த கவர்ச்சி மற்றும் கற்பனாசக்தியின் அறிகுறிகள் தெரிந்தன. அந்தப் படங்கள் வேகமாகவும், செம்மைப்படாமலும் சில சமயங்களில் கொடூரமாகவும் காட்சி தரும். சிரிப்புக்காக உதைகளையும், குத்துகளையும், கீழே விழுவதையுமே அவை நம்பியிருந்தன.

(அடுத்த அரங்கில் தொடரும்)

# சீக்கிய பொற்கோயில்

சீக்கியரின் புனிதக்கோயில் கோபுரப் பகுதி தங்கமுலாம் பூசப்பட்டு தகதகக்கும். இதன் நிழல் அருகில் உள்ள வாவியில் பட்டுத் தெறிக்கும் போது அதன் அழகே தனி. அமிர்தசரஸ் பொற்கோயிலின் பெயர் ஸ்ரீ ஹரி மந்திர் சாஹிப்.


1604 இல் கட்டப்பட்டு ஆப்கான் படையெடுப்பில் அழிந்து பின், 19 ஆம் நூற்றாண்டில் செப்பினாலும், பளிங்கினாலும் கட்டப்பட்டது. இந்த ஆலயம் 'அம்ரிட்டசர்' (தேன்குளம்) எனும் வாவியின் நடுவே ஒரு தீவு போல அமைந்துள்ளது. நிலப் பகுதியுடன் பளிங்குப்பாதை ஒன்றே இணைக்கிறது.



1984 இல் சீக்கியத் தீவிரவாதி களுக்கு எதிராக இந்திய இராணுவம் மேற்கொண்ட ஒபரேஷன் புளுஸ்டாரின் போது இந்த ஆலயம் இரத்தத்தில் தோய்ந்ததோடு பலத்த பீரங்கித் தாக்குதலுக்கும் உள்ளானது.

ஆலயத்தினுள் எவருமே புகைப் படம் எடுக்க முடியாது. முன்பு சீக்கியர் தவிர எவருமே உள்செல்ல முடியாது. இப்போது இத்தடை நீக்கப்பட்டுள்ளது.

# ஏரியன் புறப்படுவதில் தாமதம்



ஐரோப்பாவினால் உருவாக்கப்பட்ட ஏரியன் - 5 விண்கலம் சில தொழில் நுட்பக காரணங்களால் விண்நோக்கிப் புறப்படுவது தாமதமாகியுள்ளது. ஏரியன் விண்கலம் புறப்படுவதற்கு 13செக் கன்கள் இரு க கு ம போது



அதன் பயணத்தை நிறுத்துவதற்கான கட்டளை பிறப்பிக்கப்பட்டது.

விண்கலத்தில் இரு பிரதான இயந்திரங்களிலும் ஏற்பட்ட கோளாறே பயணம் தடைப்பட்டதற்குக் காரணம். இரண்டு செயற்கைக் கோள்களை விண்வெளியில் செலுத்து முகமாகவே ஏரியன் புறப்படவிருந்தது. விண்கலத்தை பரிசோதிப்பதற்கு முன்பாக அதன் எரிபொருளை வெளியேற்றும் நடவடிக்கையில் தொழில்நுட்பவியலாளர்கள் ஈடுபட்டுள்ளனர்.

ஏரியன் விண்கலம் 10 தொன் நிறையுடையது. இரு செயற்கைக் கோள்களை காவிச் செல்லக்கூடியது. சக்திவாய்ந்த இரட்டை இயந்திரங்கள் கொண்டது.

# முதல் குளோனிங் மனிதக் குழந்தை



குளோனிங் முறையிலான முதல் மனிதக்குழந்தை 2003 ஜனவரியில் பிரசவமாகவுள்ளதாக சர்ச்சைக்குரிய இத்தாலிய வைத்தியர் ஸ்வரீனோ அன்ரினோரி அறிவித்துள்ளார். இத்தகைய குளோனிங் குழந்தைகளை மூன்று பெண்கள் தற்போது தமது வயிற்றில் சுமக்கின் றனர். இவர்கள் அனைவரும் ஒரே நாட்டவர்கள் எனினும் அவர்கள் குறித்த விபரம் தரமுடியாது என அன்ரினோரி மறுத்தார்.

குளோனிங் முறையில் முதன் முதலில் 1996இல் டோலி என்ற ஆட்டுக்குட்டி பிரசவிக்கப்பட்டபோது இதே முறையில் மனிதக் குழந்தைகளையும் உருவாக்க முடியும் என கருத்து எழுந்தது. எனினும் இவ்வாறு உருவாக்கப்படும் குழந்தைகள் பல்வேறு நோய்களை காவக் கூடியவர்களாக இருப்பர் என அச்சம் தெரிவிக் கப்பட்டது. இதனால் பல நாடுகள இந் நடவடிக்கையை தடை செய்யும் சட்டங்களைக் கொண்டுவந்தன.



தற்போது இத்தகைய மனித குளோனிங் குழந்தைகள் கருவை சுமக்கும் தாய்மார் சுகதேகிகளாக இருப்பதாகவும் கருக்கள் பிரச்சினையின்றி வளர்வதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## ஜனவரியில் பிரசவமாகும்

கதிர்ப்படங்கள் மூலம், கருவொன்றின் தற்போதைய நிறை 2.5 முதல் 2.7 கிலோவாக இருக்கின்றது எனக் கண்டறியப்பட்டுள்ளது. மூன்று பெண்களும் தனது கர்ப்பிணிக் காலத்தின் 28 ஆம் 27 ஆம் வாரங்களை தற்போது கடந்துள்ளனர். வைத்தியர் ஸ்வரீனோ அன்ரினோரி தனது ஆராய்ச்சி முறைகள் குறித்தும் அவற்றின் ஆதாரங்கள் குறித்தும் வெளியார் எவருக்கும் தகவல் தர விரும்பவில்லை என்று கூறி வருகிறார். எனவே குழந்தைகள் பிறந்த பின்பே அக்குழந்தைகளைப் பரிசோதித்து மரபணு மாற்றம் மூலம் பிறந்த குழந்தைகள்தானா எனத் தம்மால் உறுதிசெய்ய முடியும் என ஏனைய வைத்தியர்கள் கூறுகின்றனர்.

# 'அபோகலிப்ஸ்' முன்னணியில்

பிரிட்டனின் சினிமா ஆய்வாளர்கள் மற்றும் ரசிகர்களின் கணிப்பீட்டில் 1979இல் பிரான்சிஸ் போர்ட் கெப்போலா இயக்கிய வியட்நாமியப் போர் தொடர்பான 'அபோகலிப்ஸ' (Apocalypse) என்ற திரைப்படமே இன்றும் முன்னணி வகிக்




கின்றது. கடந்த 25 ஆண்டுகளில் வெளிவந்த படங்களில் இதுவே மிகச் சிறந்ததாகக் கணிக்கப்பட்டுள்ளது.

'சைட் அன்ட் சவுண்ட்' எனும் சஞ்சிகை நடத்திய கணிப்பீடு ஒன்றில் இந்த 'அபோகலிப்ஸ்' திரைப்படம் 'மார்ட்டின் ஸ்கோர்ச்சின் ராகிங் புள்' என்ற திரைப்படத்தை இரண்டாம் இடத்திற்கு தள்ளியுள்ளது. 'அபோகலிப்ஸ்' என்ற இத்திரைப்படம் 2001 ஆம் ஆண்டு புது மெருகூட்டப்பட்டு மூன்று மணி நேர படமாக புதிய வடிவம் பெற்றுள்ளது. ஜோசப் கோர்னாட்டின் 'ஹாட் ஒப் டார்க்னஸ்' என்ற நாவலைத் தழுவியதாகத் இத்திரைப்படம் தயாரிக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது.




## காதல் சின்னமாக தாஜ்மஹால்



17 ஆம் நூற்றாண்டில் முகாலயச் சக்கரவர்த்தி சாஜகானினால் தன் தன் மனைவி மும்தாஜ் நினைவாகக் கட்டப்பட்ட பளிங்கு மாளிகை. சாஜகானுக்கும் மும்தாஜ் எனும் அர்ஜுமன்ட் பானு பேகத்திற்கும் 1612 இல் திருமணம் நடைபெற்றது. 1631 இல் மகப்பேறின்போது பானு பேகம் மரணமடைந்தார். அவரின் கல்லறையை மாளிகை போல் எழுப்பினார் சாஜகான். 20 ஆயிரம் பேர், 20 வருடங்களாக உழைத்து, இக்கட்டடத்தை எழுப்பினர். சாஜகானின் கல்லறையும், இங்கு அவரின் மனைவியின் கல்லறைக்கு அருகிலேயே உள்ளது. உலக அதிசயங்களில் ஒன்றான இந்தப் பளிங்கு மாளிகை, பௌர்ணமி இரவுகளில் நிலவின் கதிர்கள் பட்டு மின்னுவது கண்கொள்ளாக்காட்சி.

## சுதந்திரச் சிலை




அமெரிக்காவின் பெருமை மிக்க சுதந்திரதேவிச் சிலை (**Statue of Liberty**) 305 மீற்றர் உயரமுடையது. ஒரு கையில் தீப்பந்தமும் மறுகையில் சுதந்திரப் பிரகடனத்தை ஏந்தியும் நிற்கின்ற இச் சுதந்திரசிலை 1886 இல் நிறுவப்பட்டது. நியூயோர்க் துறைமுகத்தில் இச்சிலை நிறுவப்பட்டுள்ளது.

## பாறைப் பள்ளத்தாக்குகள்




பாறைகளின் அரிப்பை பாரியளவில் காண அமெரிக்காவின் அரிசோனா மாநிலத்தின் கிராண்ட் கன்யோன் செல்லவேண்டும். 277 மைல் நீளத்திற்கு பாறைகள் வெட்டுண்டது போல் பெரும் அகழிகள், பள்ளத்தாக்குகளுடன் இந்தப் பகுதி காணப்படுகின்றது. ஆறு மில்லியன் ஆண்டுகளுக்கு முன் இந்த பாறைப் பள்ளத்தாக்குகள் உருவானதாகக் கருதப்படுகிறது. காலையிலும் சூரிய அஸ்தமனத்தின் போதும் இப்பாறைகளின் நிறங்கள் மாறிக்கொண்டிருப்பது இதன் சிறப்பம்சமாகும்.

## கேப்டவுனின் மேசை மலை



தென்னாபிரிக்காவின் கேப்டவுனின் கடற்கரையருகே இருப்பதுதான் மேசை மலை (**Table Mountain**). மட்டக்களப்பின் தொப்பிகல காட்டில் உள்ள தொப்பி வடிவ மலைபோன்று இம்மலை தட்டையாக மேசை போல் முனையில் காணப்படும். இம்மலை பலரக விலங்குகளுக்கு சொர்க்கபுரியாக இருக்கிறது. பபூன் இனக் குரங்கு, முள்ளம்பன்றி போன்றன இங்கு சாதாரணமாக உலவும். மலையின் மேற்குப்புறத்துக்கு சிங்கத்தலை என்றும் கிழக்குப்பகுதிக்கு பேய் முனை என்றும் பெயர் உள்ளது. மலை மேல் செல்ல **Cable car** எனும் 'உயர்த்தி' வசதியுள்ளது.

## சூதாட்ட நகரம்



அமெரிக்காவின் சூதாட்டப் பொழுதுபோக்கு மையமாக விளங்குவது லாஸ்வோஸ் (**Las Vegas**) நகரம். இரவு வேளையில் சுறுசுறுப்பாகும் இந்நகரம், சூதாட்ட விடுதிகளின் மின்னொளியினால் பகல்போன்று ஜொலிக்கும். ஹேட்டல்களுக்கும் இந்நகர் பிரசித்தம்.



ஒருவர் ஒருவருடன் நல்ல உறவை வளர்த்துக் கொள்ள முக்கிய வழி கருத்துப் பரிமாற்றம், உணர்வுப் பரிமாற்றமேயாகும். வீட்டில் கணவன் மனைவியுடன் கதைக்கும் பொழுது தமது கருத்தை உணர்வைப் பகிரும்பொழுது, பரிமாறும்பொழுதுதான் வாழ்வதாக மற்றவர் உணர்கிறார். இருவ ரும் அன்புடன் உறவாடவில்லையென் றாலும், சண்டை பிடித்தாலும் கூட நான் வாழ்கிறேன் என்ற உணர்வு மற்றவருக்கு ஏற்படுகிறது. கதைக்காமல் இருந்தால் அதைத் தாங்க முடிவதில்லை.

தனது மனைவி, பிள்ளைகள் தன்னுடன் கதைக்காமல் இருந்ததால் ஒருவர் இரு முறை தற்கொலை செய்ய முனைந்தார். அவரிடம் பணம், சொத்து இருந்தது. ஆகவே கதைக்காமலிருப்பதைத் தாங்க முடிவதில்லை. இதை மனதில் கொண்டு கணவன், மனைவி இருவரும் நல்ல விதத்தில் ஒருவர் மற்றவருடன் கதைக்கப் பழகிக் கொள்ள வேண்டும். தமது கருத்தை, உணர்வைப் பரிமாறப் பழகிக் கொள்ள வேண்டும்.

குடும்பம் ஒரு சிறந்த தொடர்பு சாதனமாகவும் திகழவேண்டும். தொடர்பைக் கவனிக்கும் பொழுது அதில் மூன்று முக்கிய விடயங்களைக் கவனிக்க வேண்டும்.

- செய்தி கொடுப்பவர்

## வளர்த்துக் கொள்ளவேண்டிய

- செய்தி பெறுபவர்
- செய்தி

எமது குடும்பங்களில் செய்தியைக் கொடுப்பவர் யார்? என்று கேட்டால் ஆண் செய்தி கொடுப்பவர், பெண் செய்தி பெறுபவர் என்று பலர் விடை கூறலாம். இது பிழையாகும். நல்ல உறவு ஏற்பட வேண்டுமானால் கணவன் மனைவி இருவருமே செய்தி கொடுப்பவராகவும் செய்தி பெறுபவராகவும் இருக்க வேண்டும்.

விவாக வாழ்வில் இருவருக்கும் ஒவ்வொரு நாளிலும் அன்றைய நாள் புதியதாகவே

## கணவன் – மனைவி தொடர்புகள்

இருக்கும். பழையனவற்றையும் புதிதாகப் பார்க்க வேண்டும். இருவருக்கும் புதிய புதிய அனுபவங்கள் வரும். புதியனவற்றைக் கதைக்கப் பல விடயங்கள் இருக்கும். ஒரு சிலர் கணவன், மனைவி இருவரும் சண்டை பிடிப்பதையே கதைப்பது என எண்ணுவர். அதற்குக் காரணம் எமது பழக்கவழக்கங்களில் வேறுபட்ட நிலை இருப்பதேயாகும்.

எமது வார்த்தை முறைகளில் மூன்று வகையுண்டு.

○ "இப்ப-நேரம் என்ன" என்று ஒருவர் மற்றவரிடம் கேட்டால் "பத்து மணி" என்று விடை கொடுக்கிறார். இங்கு தொடர்பு முறியவில்லை. இதனை ஒன்றியத் தொடர்பு என்பர்.

○ "நேரம் என்ன" என்று கேட்டால் "ஏன் என்னிடம் கேட்கிறீர்கள்? உங்களுடைய மணிக்கூட்டுக்கு என்ன நடந்தது? என்று கூறுவது ஒன்றாத் தொடர்பாகும்.

○ சில வேளைகளில் கேட்கும் கேள்விகளுக்குப் பொய்யான பதிலும் கூறக்கூடும்.

நீங்கள் கடையொன்றில் உடுப்பு எடுக்கச் செல்கிறீர்கள் என்று வைத்துக் கொள்ளுங்கள். அங்கு உங்கள் மனதுக்குப் பிடித்தமான துணியை வாங்க முயலும் போது "இந்தத் துணி கடைசியாய் மிஞ்சியுள்ளது" என்று வியாபாரி கூறுகிறார். இதனால் ஏமாந்து விலை கூடக் கொடுத்து விட்டீர்கள் என்று அறிந்தால் அந்த வியாபாரியை உங்களுக்குப் பிடிக்காது போகலாம்.

ஒன்றாத் தொடர்பு வார்த்தையாலும், பொய்யான வார்த்தையாலும் உங்கள் உறவு முறிந்து போகலாம். வீட்டில் அடிக்கடி ஒன்றியத் தொடர்பு வார்த்தைகளைப் பாவிப்பதாலேயே தொடர்பு வளர்கிறது.

எஸ்.ஜே.யோகராசா

(தொடரும்)

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

**சிந்தனைக்கு**

காலமும், சூழலும் அறிந்து பயிர் செய்பவனே விளைச்சலுக்குரியவன்.

*- சீனநாட்டுப் பழமொழி.*

## நமது நோக்கு

### இனியாவது சிந்திக்கட்டும்

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசினுள் கடந்த சில ஆண்டுகளாக புகைந்துகொண்டிருந்த பிரச்சினை - நேற்றுமுன்தினம் திடீர் எரிமலையென வெடித்துள்ளது.

முஸ்லிம் காங்கிரசின் முன்னாள் தலைவர் அஷ்ரப்பின் மறைவுக்குப் பின்னர் - கட்சிக்குள் நிலவிய பதவிப் போட்டிகள் இம்முறை இரண்டாவது பெரிய பிளவாக உருவாகியுள்ளன.

ஏற்கனவே - அஷ்ரப்பிற்குப் பின்னர், கட்சியின் தலைமைப் பொறுப்பிற்கு நிலவிய இழுபறியில், ரவூப் ஹக்கீம் வெற்றிகொள்ள - அஷ்ரப்பின் துணைவியார் ஃபேரியல் அஷ்ரப்பும், எம்.எல்.ஏ.எம்.ஹிஸ்புல்லா உட்பட மூத்த தலைவர்கள் சிலரும் வெளியே சென்று தனிக்கட்சி ஆரம்பித்தனர்.

இதனால் கிழக்கு மாகாணத்தில் - முஸ்லிம் மக்களிடையே பலமான தனிக்கட்சியென வலுவான நிலையிலிருந்த முஸ்லிம் காங்கிரசின் உறுதி குலைந்ததாகவே ஆனது.

அன்று ஆரம்பித்த முரண்பாடுகளின் தொடராக - ரவூப் ஹக்கீமின் மீது தொடர்ச்சியான அழுத்தங்கள் பிரயோகிக்கப்பட்டே வந்தன.

கிழக்கு மாகாண முஸ்லிம்களின் கட்சியாகத் தோற்றம் கண்ட முஸ்லிம் காங்கிரஸ் - தன்னை இலங்கை முழுவதற்குமான முஸ்லிம் மக்களின் கட்சியாக தோற்றம் கொள்ள ஆரம்பித்ததன் மறுபக்கமாக - முக்கியமான முறுகல்நிலையொன்றும் உருவாக ஆரம்பித்தது.

கிழக்கு மாகாணத்திற்கு வெளியே கண்டியைச் சேர்ந்தவரான ரவூப் ஹக்கீம் - முஸ்லிம் காங்கிரசிற்குத் தலைமை தாங்குவதை, கிழக்கு மாகாண முஸ்லிம் தலைமைகள் விரும்பவில்லை.

இதன் முரண்பாடே - ஹக்கீமுக்கு எதிரான பெரும் பூசலாகவும் உருவாகத் தொடங்கியது.

இந்தப் பூசலை ஊக்குவிக்குமாப்போல பல்வேறு சக்திகளும் முஸ்லிம் காங்கிரசின் ஒவ்வொரு பிரிவினையும் தமது செல்வாக்குக்குள் கொண்டு வர முயன்றதும் ஒருபுறம் நடந்தது.

குறிப்பாக - ஐக்கிய தேசியக் கட்சியானது, முஸ்லிம் காங்கிரஸ் பிளவுபட்டால் தனக்கான நாடாளுமன்ற அறுதிப் பெருமான்மைப் பலம் பாதிக்கப்படலாம் என்பதால் - கட்சியைக் குலையவிடாமல் பாதுகாத்துக் கொள்ள முயன்றது.

மறுபக்கம்-முஸ்லிம் காங்கிரஸைப் பிளவுபடுத்துவதன் மூலம், பொதுஜன ஐக்கிய முன்னணிப் பிரமுகர்களும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் தாம் விரும்பியவாறு, ரணில் அரசாங்கத்தைக் கவிழ்க்கத் திட்டமிட்டனர்.

இப்படியான சூழலில் சமாதானப் பேச்சுக்கள் பற்றிய தெளிவான அணுகுமுறையொன்றை வகுத்துக்கொள்வதிலும் முஸ்லிம் காங்கிரஸ் சிக்கல்களை எதிர்கொண்டது.

விடுதலைப் புலிகளுக்கும், அரசாங்கத்திற்குமிடையே - புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்தாகியதும், விடுதலைப் புலிகளின் தலைவருடன் நேரடிப் பேச்சுக்களை நடத்தி, தமிழர்களுக்கும் முஸ்லிம்களுக்குமிடையே நல்லதொரு இணக்கப்பாட்டினை எட்டிக்கொள்வதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டபோதும் - முஸ்லிம் காங்கிரஸ், தனது அணுகுமுறைகளில் இருந்து வேறுபடுவதாக நடந்துகொண்டது.

அங்கொன்றும் இங்கொன்றுமான புறச்சூழல் முறுகல்களைத் தவிர்த்து - தொலைநோக்கோடு நடந்துகொள்ளவேண்டிய கட்டத்தில், முஸ்லிம் காங்கிரஸ் நடந்துகொண்ட விதம், தமிழர் தரப்பில் அதிருப்தியைத் தோற்றுவித்ததோடு மட்டுமல்லாது - சமாதானம் பற்றிய உறுதியான நிலைப்பாட்டினை எடுக்க வேண்டிய நிலையிலிருந்தும் முஸ்லிம் காங்கிரஸ் தவறியது.

இந்த உறுதிப்பாடு விலகலும் - கட்சிக்குள் குழப்பங்களைத் தோற்றுவிப்பதற்குக் காரணமாக அமைந்துள்ளது. எரியும் நெருப்பிற்கு எண்ணெய் ஊற்றுவதாக பேரினவாத சக்திகள் அங்கும் புகுந்துகொண்டன. இதனால் முஸ்லிம் காங்கிரஸ் மேலும் விரிவு கண்டது.

இத்தகைய போக்குகளின் தொடர்ச்சியே இன்று பெரும்பிளவாக உருவெடுத்துள்ளது.

உண்மையில் - முஸ்லிம் காங்கிரஸ் தலைமைத்துவம் தனது பிரதேச அரசியல் வேறுபாடுகளுக்கப்பால் - தெளிவான பார்வையை வகுத்துக் கொண்டிருந்தால் இத்தகைய முரண்பாடுகளைத் தணித்திருக்க முடியும்.

மாறாக - காலத்துக்குக்காலம் அந்த நேர ஆதாயத்துக்காக மட்டும் தேர்ந்தெடுத்த குறுகிய நோக்குக் கொண்ட அரசியல் நிலைப்பாடுகளும் - அதனோடு ஊடுருவிக் கொண்ட பேரினவாதத்தின் செல்வாக்குமே - இன்று அக்கட்சியைச் சீர்குலைத்து வருகின்றமைக்கான முக்கிய காரணங்கள் என்பதனை இனியாவது முஸ்லிம் தலைமைகள் உணரவேண்டும்.

# நோர்வேயிலிருந்து நாடு திரும்ப முண்டியடிக்கும் தமிழ் மக்கள்!

## விமானப் பயணச் சீட்டுக்களுக்குத் தட்டுப்பாடு

(ஒஸ்லோ)

அரசாங்கத்துக்கும் புலிகளுக்கும் இடையிலான புரிந்துணர்வு உடன்பாடு நடைமுறைக்கு வந்து-சமாதானப் பேச்சுக்கள் இடம்பெற்று வரும் சூழ்நிலையில் - நோர்வேயிலிருந்து தமிழ் மக்கள் தாயகம் திரும்புவதில் அதிக ஆர்வம் காட்டி வருகின்றனர்.

நோர்வேயில் புகலிடம் தேடிச் சென்று அங்கு குடியுரிமை பெற்றவர்கள் சொந்த நாட்டுக்குத் திரும்பிச் சென்று வர விரும்புவதாகவும், இதனால் நோர்வே - கொழும்பு விமான டிக்கட்டுகளைப் பெறுவதில் பலத்த நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாகவும் தெரியவருகின்றது.

தாயகத்துக்குச் சென்று வர விரும்பும், நோர்வேயிலுள்ள தமிழ்மக்கள், பயண முகவர் நிலையங்களில் முண்டியடித்து வருகின்றனர். அடுத்த வருடம் பெப்ரவரி மாதம் வரை இலங்கைக்கான விமான பயணச் சீட்டுக்களைப் பெற்றுக் கொள்ள முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

பெப்ரவரி மாதம் வரை பயணம் செய்வதற்காக ஏராளமானோர் விமானப் பயணச்சீட்டுக்களை கொள்வனவு செய்துள்ளதாகவும் தெரியவருகின்றது.

# மாதாந்தப் பேச்சுக்கள் ஜப்பானில்; அழைப்பினை அரசாங்கம் ஏற்றது!

## ரணிலின் இன்றைய விஜயத்தில் மேலும் பேச்சுக்கள்

(ரோக்கியோ)

அரசாங்கத்துக்கும் தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் மாதாந்தம் இடம்பெற்று வரும் பேச்சுக்களை ரோக்கியோவில் நடத்துவதற்கு ஜப்பான் விடுத்திருந்த அழைப்பினை இலங்கை அரசாங்கம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டிருக்கின்றது.

ரோக்கியோவில் இனிவரும் காலங்களில் பேச்சுக்களை நடத்தும்படியும், இதற்கான சகல வசதிகளையும் தாம் செய்து தருவதாகவும் ஜப்பானிய அரசாங்கம், இலங்கை அரசாங்கத்திடமும், தமிழீழ விடுதலைப் புலிகளிடமும் கோரிக்கைகளை விடுத்திருந்தது.

இதனை இலங்கை அரசாங்கம் மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்டிருக்கின்றது. ரோக்கியோவில் பேச்சுக்களை நடத்துவது தொடர்பாக ஜப்பானிய அரசாங்கத்துடன் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க பேச்சுக்களை நடத்துவார்.

இன்று ஜப்பானுக்குச் செல்லும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 5 நாட்கள் அங்கு தங்கியிருப்பார். இதன்போது ஜப்பானியப் பிரதமர் யுனிகிறோ கொய்சுமி, மன்னர் அகிகிட்டோ, ராணி மிக்சிக்கோ ஆகியோரைச் சந்தித்துப் பேச்சுக்களை நடத்துவார்.

ஜப்பானின் அழைப்பை ஏற்றுள்ள பிரதமர் ரணில், ஜப்பானிடம் இருந்து பெருமளவிலான நிதியுதவி கிடைக்கும் எனத் தாம் எதிர்பார்ப்பதாகவும் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

## இராணுவ அதிகாரிகளுக்கு

# இரண்டு தடவைகளுக்கு மேல் சேவை நீடிப்பு கிடையாது

(கொழும்பு)

இராணுவத்தைச் சேர்ந்த மூத்த படையதிகாரிகளுக்கு இனிவரும் காலங்களில் இரண்டு சேவை நீடிப்புக்களுக்கு மேல் வழங்குவதில்லை என ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தீர்மானித்துள்ளார்.

ஜனாதிபதியின் இந்தத் தீர்மானம் குறித்து ஊடகச் செயலாளர் ஜினதாஸ பீரிஸ் தெரிவித்துள்ளதாவது,

இனிவரும் காலங்களில் மேஜர் ஜெனரல் தரத்திலுள்ள அதிகாரிகளுக்கே இரண்டாவது சேவை நீடிப்பு வழங்கப்படும். அதேவேளை மேஜர் ஜெனரல் தரத்திலுள்ள 55 வயதுக்குட்பட்டவர்களுக்கே முதலாவது சேவை நீடிப்பு வழங்கப்படும்.

55 வயதுக்கு முன்னர் மேஜர் ஜெனரல் தரத்தில் தமது முழுமையான பதவிக்காலத்தைப் பூர்த்தி செய்து குறித்த படையதிகாரியின் சேவை அவசியம் என இராணுவத் தளபதி கோரினால் முதலாவது சேவைநீடிப்பு வழங்கப்படும்.

இந்நிலையில் இவர்களின் செயற்பாடுகள், திறமை, அனுபவம், இராணுவத் தளபதியின் சிபார்சு என்பன இரண்டாவது சேவை நீடிப்புக்கு அவசியமானதெனினும், குறித்த படையதிகாரியின் சேவை அவசியம் தேவை என உணரப்பட்டால் மட்டுமே இரண்டாவது சேவைநீடிப்பு வழங்கப்படும்.

அத்துடன் முன்னர் பிரிகேடியர் தரத்திலுள்ள அதிகாரிகளுக்கு இரணடாவது சேவை நீடிப்பு வழங்கப்பட்டது. இவைவரும் காலங்களில் பிரிகேடியர் அல்லது அதற்குக் கீழ் நிலையிலுள்ள படை அதிகாரிகளுக்கு இரண்டாவது சேவை நீடிப்பு வழங்கப்படமாட்டாது.

தற்போது பெருமளவிலான பிரிகேடியர் தர அதிகாரிகள் பதவியில் இருந்து வரும் நிலையில், மேஜர் ஜெனரல் பதவி உயர்வில் சில நெருக்கடிகள் ஏற்பட்டுள்ளதாகவும் ஜினதாஸ பீரிஸ் தெரிவித்துள்ளார்.

அண்மையில் இராணுவத் தளபதிக்கு வழங்கப்பட்ட 3 வருட சேவை நீடிப்பினால் 8 மேஜர் ஜெனரல்கள் பாதிக்கப்படுவார்கள் எனத் தகவல்கள் வெளிவந்திருந்த நிலையிலேயே ஜனாதிபதியின் இந்தத் தீர்மானம் வெளிவந்திருக்கின்றது.

# பெண்களின் உரிமைகளுக்காக அக்கரைப்பற்றில் ஊர்வலம்!

(அம்பாறை)

பாதிப்புற்ற பெண்கள் அரங்கம் என்ற அமைப்பு மனித உரிமைகள் இல்லம் மற்றும் பெண்கள் அபிவிருத்தி நிறுவனத்துடன் இணைந்து அக்கரைப்பற்றில் நேற்றுக் காலை மாபெரும் கண்டனப் பேரணி ஒன்றை நடாத்தியது.

சர்வதேச ரீதியாக பெண்கள் மீதான வன்முறைகளைக் கட்டுப்படுத்த வலியுறுத்தும் இப்பேரணி, பெண்களின் உரிமைகளும் மனித உரிமைகளே என்ற கருப்பொருளில் இடம் பெற்றிருந்தது.

அத்துடன் பெண்களுக்கான அதிக வேலை, சீதனம், பாலியல் வல்லுறவு, விருப்பமற்ற உறவு, கருத்துக்களைத் திணித்தல், சம்பளமில்லாத வேலை போன்ற பெண்களுக்கு எதிரான கொடுமைக்களை நீக்கவும் இப்பேரணியில் வலியுறுத்தப்பட்டது. பேரணியின் நினைவாக வாகனங்களில் பெண்களின் உரிமைகளை வலியுறுத்தி ஸ்ரிக்கர்களும் ஒட்டப்பட்டன.

(08)

# முஸ்லிம் பிரதேசங்களில் ஹர்த்தால்கள் நடத்துவதைத் தவிர்க்கக் கோரிக்கை

## உலமா சங்கங்களின் சம்மேளனம் விடுத்தது

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு மாவட்டத்தில் முஸ்லிம் பிரதேசங்களில் இனி வரும் காலங்களில் ஹர்த்தால் நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டாம் என, முஸ்லிம் மக்களை மட்டு.மாவட்ட உலமா சபைகளின் சம்மேளனம் வேண்டியுள்ளது.

இது தொடர்பாக உலமா சபைகளின் சம்மேளனம் விடுத்துள்ள அறிக்கையில், கடந்த காலங்களில் முஸ்லிம்களின் பிரதேசங்களில் ஒழுங்கு செய்யப்பட்ட ஹர்த்தால்கள் காரணமாக இயல்பு நிலை பாதிக்கப்பட்டது.

அத்துடன் தமிழ் - முஸ்லிம் மக்களின் உறவு நிலைகளும் பாதிப்படைய நேரிட்டது. சமாதான முயற்சிகள் முன்னெடுக்கப்படுகின்ற சூழலில் இத்தகைய ஹர்த்தால்களை நடத்துவது சமாதானப் பேச்சுக்களைப் பாதிக்கும் என்றும் -

இதனால் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இனி வரும் காலங்களில்- முஸ்லிம் பிரதேசங்களில் ஹர்த்தால் நடத்துவதைத் தவிர்க்கும்படியும், எதிர்ப்புணர்வுகளை அகிம்சை ரீதியில் வெளிப்படுத்துவதற்கு வேறு வழி முறைகள் குறித்து பரிசீலிக்கும்படியும் உலமா சபைகளின் சம்மேளனம் கோரிக்கை விடுத்துள்ளது.

# புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளுடன் அரசியல் நகர்வுகளை வேறுபடுத்த முடியாது

## ஜப்பானிய விசேட தூதர் யசுகி அகாஷி

(ரோக்கியோ)

ரோக்கியோவில் நடைபெறவுள்ள உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் இலங்கைக்கு பெருமளவிலான நிதியுதவிகள் கிடைக்கும் என்று ஜப்பானிய அரசின் விசேட தூதுவரான யசுகி அகாஷி தெரிவித்துள்ளார்.


இலங்கையில் நடைபெற்ற போரால் அழிவுகள் நிறையவே ஏற்பட்டுள்ளன. தற்போது சமாதானப் பேச்சுக்கள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. இந்த நிலையில் புனர்வாழ்வு, புனரமைப்பு பணிகளை, அரசியல் தீர்வு நோக்கிய பாதையில் இருந்து வேறுபடுத்திப் பார்க்கமுடியாது.

சமாதானப் பேச்சுக்களில் எத்தகைய தடங்கல்கள் ஏற்பட்டாலும், உதவிவழங்கும் நாடுகள் இலங்கைக்கான தமது உதவிகளைத் தொடர்ந்து வழங்க வேண்டும் என்றும் யசுகி அகாஷி கோரிக்கை விடுத்துள்ளார்.

# 'எங்கட உழைப்பில மண்ணை அள்ளிப் போட்டிட்டினம்'

## மனங்குமுறும் நடைபாதை வியாபாரிகள்

**மாநகரசபை அதிகாரிகளாலும் பொலிஸாராலும் யாழ். மரக்கறிச் சந்தைப்பகுதி கட்டடத்திலிருந்து முனீஸ்வரன் வீதிக்கு இடம் மாற்றப்பட்ட நடைபாதை வியாபாரிகளுடன் நமது செய்தியாளர் உரையாடியபோது பெற்றுக் கொண்ட விடயங்களை உங்களுடன் பகிர்கின்றோம்.**



யோகேஸ்வரன்

***பெயா*** - யோகேஸ்வரன்
***வயது***- 25
***இடம்***- சொந்த இடம் மன்னார், வசிப்பது புதுக்குடியிருப்பு, தொழிலுக்காக யாழ்ப்பாணம் வந்திருக்கின்றேன்.

இப்ப நான் கஸ்ரத்தின் நிமித்தம் கடன்பட்டு நாங்க வியாபாரம் செய்யேக்க, முந்தியொருக்கா இப்படி வந்து, ஒரு நாள் கடையப்பூட்டச சொல்லி விட்டு எழுப்பினாங்கள். இன்றைக்கு என்னென்றால் சாமான் போடவெண்டு ஏழு மணிக்கு வந்தனாங்கள். வரேக்க பொலிஸோட மாநகர சபையாட்கள் வந்திட்டினம். எங்கட ரெண்டு பேர சேட்டில பிடிச்சு பொலிஸ் கேட்டுது. மூஞ்சி முகம் எல்லாம் உடைச்சுப் போடுவோம். உடன எழும்ப வேணடும் என்று, அதோட துவக்கால சுடவும் லோட் பண்ணிக் கொண்டு வந்தாங்கள். இதால நாங்கள் எல்லோரும் பேசாம விட்டுட்டோம்.



தங்கேஸ்வரன்

***பெயர்*** - ம. தங்கேஸ்வரன்
***வயது***- 32

எங்களுக்கு இஞ்ச மலசல கூட வசதியையும், குடி நர் வசதியையும் ஏறபடுத்தித் தாங்கோ, நாங்கள் உடன எழுமபுவம் என்று சொன்னனாங்கள். இப்படியிருக்க இன்றைக்கு நாங்கள் வீட்டில் இருந்து வாறதுக்குள்ள பொலிஸைக் கொண்டு எல்லோரும் வந்து எங்கட சாமான்களை முனிசிப்பல் ரக்டரில் ஏற்றிக் கொண்டு இங்ககொண்டு வந்து போட்டாங்கள். என்னத்தைச் செய்யுறது. மலசலகூடம் இல்ல, தண்ணீர் வசதியில்ல. நாங்கள் நெடுக இருக்கிறதெண்டால், இந்த அடிப்படை வசதியெல்லாம் செய்து தர வேண்டும். இஞ்ச பாதுகாப்பில்ல, எங்கள் சாமான் பொருட்கள், தளபாடங்களுக்கு மாநகரசபை பாதுகாப்பு வழங்குமா?



சண்முகராசன்

***பெயர்***- அ.சண்முகராசன்
***வயது***- 26
***இடம்***- அரசடி நல்லூர்


இன்றைக்கு பேமண்ட் வியாபாரிகளை பொறுத்த வரையில் மாநகர சபையும் பொலிஸாரும் சேர்ந்து அராஜகத்தனமான ஒரு நடவடிக்கையை எடுத்திருக்கினம். முன்னறிவித்தல் எதுவுமே தரேல. அதாவது இருநூறு பேருக்கு கடை தாரதெண்டு பதிஞ்சு கடை குடுத்தாலொழிய, அந்த இடங்களைக் காட்டி ஒருத்தருக்கும் ஒழுங்கான இடம் கொடுக்கேல. இது குப்பை கொட்டின கிடங்கு. இஞ்ச வந்து பொதுமக்கள் சாமான் வாங்குவினமா? கிளிநொச்சி சந்தையைப் பாருங்கோ, ஒரு ஒழுங்கான கொட்டிலைப் போட்டு குடுத்திருக்கினம். ஒழுங்கான வாடகையை வாங்கிறினம். ஒழுங்கான வியாபாரம் நடக்குது. ஆனால் இஞ்ச வந்து நாங்கள் வியாபாரம் செய்யுறது என்றால் இயலாத காரியம். இப்ப எங்களையெல்லாம் கொண்டு வந்து நடுரோட்டில விட்டுட்டு எல்லாரும் போயிற்றினம். நாங்கள் நடுரோட்டில அழுது கொண்டு நிற்கிறோம். எங்கட உழைப்பில மண்ணள்ளிப் போட்டுட்டு அவையள் போயிட்டினம். எனக்கு நான்கு பிள்ளைகள். நாங்கள் எல்லாரும் குடும்பகாரர். நான் வந்து இந்த பேமண்ட் தொழில 12 வருசமா செய்யிறன். இத விட்டால் எனக்கு வேற தொழில் இல்ல.



சாம்பரெட்ணம்

***பெயர்***- சாம்பரெட்ணம்
***வயது***- 52

இன்றைக்கு நாங்கள் கடை போட வந்தனாங்கள். சாமான் எல்லாம் கட்டிக் கொண்டு வந்து கடைபோட ஆயத்தப்படுத்திக் கொண்டு இருக்கேக்க இவையள் வந்து சாமான் எல்லாத்தையும் அறுத்துக் கொட்டிச்சினம். இப்படி அல்லோலகல்லோலாப் பட்டுக் கொண்டு இருந்தம். நாங்கள் பயத்தில் சாமானைக் கட்டிக்கொண்டு இருக்கேக்க, என்ர 13,500 ரூபாக் காசும் 1,500 ரூபா பெறுமதியான படங்களும் அடையாள அட்டையும் காணாமல் போயிற்றுது.



மொஹமட் றியாஸ்

***பெயர்***- ஜமால் மொகமட் றியாஸ்
***வயது***- 24

நாங்கள் இஞ்ச ஆறுமாதமா நடைபாதை வியாபாரம் செய்து வாறோம். மரக்கறி சந்தைப் பகுதி எங்களுக்கு வியாபாரம் செய்ய நல்ல பொருத்தமான இடம். நாங்கள் சமானப் போட்டிட்டு பக்கத்தில பள்ளிக்கு சமய வேலைகளுக்காக போய்வரலாம், பக்கத்தில சாப்பிடலாம். இப்படி பல வசதி இருக்குது. இதில வியாபாரம் செய்யுறதாக இருந்தால் ஒவ்வொருநாளும் கொட்டில் போடோணும். ஒவ்வொரு நாளும் பொலித்தீன் வாங்கி அடிக்க வேணும். நாங்கள் உழைக்கிற வியாபாரம் இந்த பெட்டிக்கும் பொலித்தீனுக்கும் போகும். தற்சமயம் இதுல ஒருவசதியும் இல்லை.



மொஹமட் முஸ்தபா

***பெயர்***- மொகமட் முஸ்தபா
***வயது***- 28
***இடம்***- சொந்த இடம் யாழ்ப்பாணம். இப்ப இருக்கிறது புத்தளம்.

நாங்கள் ஆறு மாதமா வியாபாரம் செய்கிறோம். அங்க போ இஞ்ச போ என்று பிரச்சினைதான். இன்றைக்கு காலேல சாமான் போடேக்க மாநகர சபையாட்கள் பொலிஸோட வந்தாங்கள். வந்து எங்கட மரந்தடி பெட்டிகள் எல்லாத்தையும் உடைத்தெறிந்தாஞ்சாங்கள். அதோட பொலிஸ் எங்கட இரண்டு பேருக்கு அடிச்சிருக்கிறாங்கள்.

**சந்திப்பு - தே.லிவிங்ஸ்டன்.**

---

### சமாதானப் பேச்சுக்களில்

## மக்களின் கருத்துக்களை பிரதிபலிக்க நடவடிக்கை எடுக்குமாறு கோரிக்கை!

(யாழ்ப்பாணம்)

சமாதானப் பேச்சுவார்த்தையின் போது பொது மக்களின் கருத்துக்களும் பிரதிபலிக்கும் வகையிலான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். இதற்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு, யாழ்.அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அரசிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.


விடுதலைப் புலிகளுக்கும் அரசுக்குமிடையில் நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தையின் போது பொதுமக்களின் கருத்துக்களுக்கும், உணர்வுகளுக்கும் மதிப்புக்கொடுத்து அவர்களின் கருத்துக்களும் சமாதானப் பேச்சுக்களின் போது பிரதிபலிக்கும் வகையில் உரிய ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும் என்றும் அரசசார்பற்ற நிறுவனங்களின் இணையம் அரசிடம் கோரிக்கை முன்வைத்துள்ளது.

இவ்விடயம் தொடர்பாக மேற்படி இணையம், அரசியல் அமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸுக்கு முகவரியிடப்பட்ட கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளது. சமாதான நடவடிக்கைகளில் மக்களின் நேரடிப் பங்களிப்பு ஏற்படும் வகையில் ஏற்பாடுகள் அமைய வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது. (க,லி)

## கைதடிப் பிள்ளையார் ஆலயம் 46 லட்சம் ரூபா சொத்து அழிவு!

கைதடிப் பகுதியில் கண்டி வீதிக்கு அண்மையில் அமைந்துள்ள கைத்தளி ஒக்களை விநாயகர் ஆலயம் 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற யுத்த அனர்த்தங்களின் போது பலத்த சேதமடைந்ததுடன் 46 இலட்சம் ரூபா பெறுமதியான சொத்துக்களும் அழிந்துள்ளதாக ஆலய நிர்வாகி ஆர்.சுப்பிரமணியம் தெரிவித்துள்ளார்.

தற்போது அப்பகுதியில் மக்கள் மீளக்குடியமர்ந்ததை அடுத்து ஆலயத் திருப்பணி வேலைகள் தொடர்ந்து நடந்து வருகின்றன எனவும், இராச கோபுரம் ஒன்றை அமைப்பதற்கான ஆரம்ப வேலைகள் நடைபெற்று வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்தா. (34)




பருத்தித்துறை தேசிய சேமிப்பு வங்கியில் உலக சிக்கன தினத்தை முன்னிட்டு நண்பர்கள் (Friends) கணக்கை ஆரம்பித்துவைத்து வங்கி முகாமையாளர் எம்.பரமானந்தம் உரைநிகழ்த்துவதையும் அருகில் பருத்தித்துறை பிரதேச செயலகத்தைச் சேர்ந்த நிர்வாக உத்தியோகத்தர் ஆர்.விக்கினேஸ்வரமூர்த்தியையும் பருத்தித்துறை சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தாவையும் படத்தில் காணலாம். (17)

### வெள்ள வாய்க்காலில் விழும் வாகனங்கள்

உடுவிலில் இருந்து சீரணிக்குச் செல்லும் டச்சு வீதியின் குறுக்காக வெள்ளநீர் ஓடுவதற்காக அவ்வூர் மக்களால் வெட்டப்பட்ட 4 அடி ஆழமும், 2 அடி அகலமும் கொண்ட குழியினுள் கடந்த வியாழக்கிழமை ஓட்டோ ஒன்று வீழ்ந்து சேதமடைந்தது.

இதே குழியினுள் லொறி ஒன்றும் புதையுண்டு பல சிரமத்தின் மதத்தியில் மீட்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. (69)

## புளொட் சார்பில் மாநகரசபை உறுப்பினர் பதவியேற்பு!

(நெல்லியடி)

யாழ்.மாநகர சபையில் ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி சார்பில் புதிய உறுப்பினராக சாகுல் ஹமீட் மகீர் நவம்பர் 18 ஆம் திகதி சத்தியப் பிரமாணம் செய்து கொண்டார்.

ஜனநாயக மக்கள் விடுதலை முன்னணி சார்பில் இதுவரை நிரப்பப்படாது இருந்த வெற்றிடம் தற்போது நிரப்பப்பட்டதை அடுத்து மாநகரசபை உறுப்பினர்களின் எண்ணிக்கை 22 ஆகியுள்ளது. தற்போது தமிழர் விடுதலைக் கூட்டணியின் பிரதிமுதல்வர் பதவியே நிரப்பப்படாது உள்ளது. (13)

### மந்துவில் டச்சு வீதியில்

## இராணுவத்தினரால் ஏற்றப்படும் வீதியை திருத்தப் பறித்த கற்கள்

(சரசாலை)

வீதியைத் திருத்துவதற்கெனப் பறிக்கப்பட்டு திருத்த வேலைகள் மேற்கொள்ளப்படாமல் கடந்த மூன்று வருடங்களாக வீதியில் குவிக்கப்பட்டிருந்த கற்களை இராணுவத்தினர் தினமும் ஏற்றிச் செல்லும் சம்பவம் மந்துவில் டச்சு வீதியில் இடம் பெற்று வருகின்றது.

சாவகச்சேரிப் பகுதியில் இருந்து வரணிக்குச் செல்லும் டச்சு வீதியை, மீசாலையில் இருந்து மந்துவில் கிழக்கு வரையான ஒரு மைல் தூரம் திருத்துவதற்கென 99ஆம் ஆண்டு கற்கள் பறிக்கப்பட்டிருந்தது.

கடந்த மூன்று வருட காலமாக இவ் வீதி திருத்தப்படாமல் காணப்படுவதால் தினமும் உழவு இயந்திரத்தில் வரும் இராணுவத்தினர் இக் கற்களை ஏற்றிச் செல்வதாக இப் பகுதி மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (34)

## மருத்துவ முகாம்களை நடத்தும் திலீபன் மருத்துவக் குழு

(வடமராட்சி)

தியாகதீபம் திலீபன் மருத்துவமனை வைத்தியக் குழு குடாநாட்டில் மருத்துவ முகாம்களை நடாத்தி வருகின்றது.

யாழ்ப்பாணம், தீவகம், வடமராட்சிப் பகுதிகளைச் சேர்ந்த கிராமங்களிலுள்ள மக்களுக்கு மருத்துவ சேவைகளை வழங்கும் பொருட்டு மருத்துவ முகாம்கள் நடாத்தப்பட்டு வருகின்றன.

கடந்த சனியன்று துன்னாலை-குடத்தனையில் ஒரு மருத்துவ முகாம் நடைபெற்றது. இதில் நூற்றுக்கணக்கான கிராமமக்கள் சிகிச்சை பெற்றனர்.

## காணாமற் போனோரின் பாதுகாவலர் சங்கம் யாழ். செயலகத்தின் முன் நடாத்திய மறியற் போர்!



# யாழ்.சிறையிலுள்ள தமிழக மீனவர்களை அமைச்சர் மகேஸ்வரன் பார்வையிட்டார்!

(யாழ்ப்பாணம்)

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு யாழ் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழக மீனவர்களை அமைச்சர் மகேஸ்வரன் நேற்று யாழ். சிறைச்சாலைக்குச் சென்று பார்வையிட்டார்.

இலங்கை, நெடுந்தீவு கடற்பரப்பில் வைத்து கடற்படையினரால் கடந்த சனிக்கிழமை கைது செய்யப்பட்ட 14 தமிழக மீனவர்கள், ஊர்காவற்துறைப் பொலிசாரால், ஊர்காவற்துறை நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்டு, விளக்கமறிலுக்காக யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

யாழ். சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் மேற்படி மீனவர்களையே இந்துக் கலாச்சார அமைச்சர் தி.மகேஸ்வரன் சென்று பார்வையிட்டு மீனவர்களின் குறைகளைக் கேட்டு அறிந்து கொண்டதுடன் மேற்படி மீனவர்களை விடுதலை செய்வதற்கு வேண்டிய நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

அத்துடன் 14 தமிழக மீனவர்களுக்கு உடுபுடவை வழங்கவும் அமைச்சர் மகேஸ்வரன் நடவடிக்கை எடுத்தார். பின் யாழ். சிறைச்சாலையில் ஏற்கனவே தடுத்து வைக்கப்பட்டிருந்த 40 தமிழக மீனவர்களையும், மற்றும் கைதிகளையும், பார்வையிட்டதுடன் அவர்களுடைய குறைகளையும் கேட்டு அறிந்து கொண்டார்.

அமைச்சர் மகேஸ்வரனுடன் பனை அபிவிருத்திச் சபைத் தலைவர் சிவபாதம், வடமாகாண கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத் தலைவர் தவரட்ணமும் சிறைச்சாலைக்கு விஜயம் செய்தனர்.

# திருமறைக் கலாமன்ற தினம்

(யாழ்ப்பாணம்)

யாழ்.திருமறைக்கலாமன்றத் தினம் இன்று அனுஷ்டிக்கப்படவுள்ளது. இன்றைய தினம் காலை 7 மணிக்கு பொது வழிபாடு நடைபெற்று, பின்னர் காலை 11.30 மணியளவில் திருமறைக்கலாமன்றத்தின் தின ஞாபக மரநடுகை வைபவம் நடைபெறும். தொடர்ந்து மாலை 7.30 மணிக்கு 'தாலேலோ' என்ற நத்தார் பண்டிகைப்பாடல்கள் அடங்கிய ஒலிநாடா வெளியீடும், 'ஆற்றுகை' என்னும் நாடகமும் அரங்கியலும் இதழுக்கான நூல் அறிமுக விமர்சனமும் இடம்பெறும். பின்னர் கலை நிகழ்ச்சிகள் இடம்பெறவும் ஏற்பாடாகியுள்ளது. (லி)

## நேற்று குருநகர்ப் பாதுகாப்பு வலயத்தில்...



குருநகர் கடற்கரைப் பகுதிக்கு அமைச்சர் மகேஸ்வரன், பொது அமைப்புக்களின் பிரதிநிதிகள் நேற்று விஜயம்.



இங்குமட்டுமே வள்ளங்களை நிறுத்த இராணுவம் உத்தரவு.



எங்கு திரும்பினும், கடற்கரையெங்கும் காவலரண்கள்.



மீனவர்கள் இவ்வழியூடு மாத்திரமே தொழிலுக்குச் செல்லலாம்.



தூரத்தே தெரியுது ஐந்துமாடி, எங்கே போனது சனக்கூட்டம்?

# கொழும்பு-தூத்துக்குடி கப்பல் சேவை தாமதத்திற்கு இந்தியாவே காரணம்!

(கொழும்பு)

கொழும்புக்கும் தூத்துக்குடிக்கும் இடையிலான பயணிகள் சேவை ஆரம்பிக்கப்படுவதில் ஏற்பட்டுள்ள தாமதத்துக்கு ஒப்பந்த நடைமுறைகள் தொடர்பாக இருந்துவரும் இழுபறியே காரணம் எனத் தெரியவருகின்றது.

ஒப்பந்த நடைமுறைகள் குறிதது ஏற்பட்டுள்ள இந்த இழுபறிக்கு இந்திய அரசே காரணம் எனத் தெரியவருகின்றது. தூத்துக்குடிக்கும் கொழும்பிற்கும் இடையில் போக்குவரத்தில் ஈடுபடுவதற்கான கப்பல் கொழும்புத துறைமுகத்தில் நிறுத்தப்பட்டிருக்கின்றது. பயணிகளுக்கான வசதிகளும் புதிதாக அமைக்கப்பட்டுள்ளன.

ஆனால், இந்தியத் தரப்பில் உடன்பாடு குறித்து சரியான முடிவுகளை எடுக்காததால்தான் கப்பல் சேவைகள் ஆரம்பிக்க முடியாதுள்ளதாகத் தெரியவருகின்றது. இலங்கைத் தரப்பு எதிர்வரும் 8 ஆம் திகதி கப்பல் சேவையை ஆரம்பிப்பதற்குரிய அனைத்து ஏற்பாடுகளையும் பூர்த்தி செய்திருக்கின்றது.

ஆனால் இந்தியாவிடமிருந்து உரியபதில் கிடைக்காதமையால்தான் கப்பல் சேவை தாமதமடைந்து வருகின்றது.

இதேவேளை, சமாதான முயற்சிகளில் இந்தியா பங்கேற்காது ஒதுங்கி நிற்பதால்தான், கப்பல் சேவை தாமதமடைவதாக வெளியான தகவல்கள் இந்திய கப்பல்துறை அதிகாரி ஒருவர் மறுத்துள்ளார் என்பதும் குறிப்பிடத்தக்கது.

# கொரியக் குடாவில் அமைதி பேணுக! ரஷ்யா, சீனா இணைந்து கோரிக்கை!!

## அமெரிக்காவுக்கும் வடகொரியாவுக்கும் பகிரங்க வேண்டுகோள்




(பீகிங்)

அமெரிக்காவையும் வடகொரியாவையும் சுமுகமாக இராஜீக உறவுகளைப் பேணுமாறு சீனாவும் ரஷ்யாவும் இணைந்து கோரியுள்ளன. அணுவாயுதமற்ற பிரதேசமாக கொரியக் குடாவைப் பேணுமாறும் கூட்டாக வெளியிட்ட அறிக்கையில் அவை தெரிவித்துள்ளன.

சீனத் தலைநகர் பீகிங்கில் சீனத் தலைவர், ஜியாங் செமினை, ரஷ்ய ஜனாதிபதி புட்டின் சந்தித்தபோதே, மேற்கண்டவாறு இரு நாட்டுத் தலைவர்களும் இணைந்து கோரியுள்ளனர்.

சீனாவிற்கு புதிய தலைவர் ஹு ஜின்டோ தெரிவு செய்யப்பட்டதன் பின்னர், ரஷ்யத் தலைவரின் சீன விஜயம் குறிப்பிடத்தக்க ஒரு அம்சமாக அமைந்துள்ளது.

சீனாவும் ரஷ்யாவும் தமது இராஜீக உறவுகளை வளர்த்துக்கொள்வது அண்மைக்கால சர்வதேச உறவுகளில் புதிய பரிமாணங்களை ஏற்படுத்தும் எனக் கூறப்படுகின்றது.



ஈராக் விவசாயப் பண்ணை ஒன்றில் பேரழிவு ஆயுதங்களை தேடும் ஐ.நா. சோதனையாளர்



மேற்குக் கரைக்கும் இஸ்ரேலுக்கும் இடையில் அமைக்கப்பட்ட பாதுகாப்பு வேலியருகே இஸ்ரேலிய இராணுவ ரோந்து அணி.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

English Academy
210, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.
மின் அஞ்சல் - thangan 672002 @ yahoo.com
உங்கள் பிள்ளைகளுக்கு சிறந்த இடம்
Better place for your Children
(சி-186)

# முஸ்லிம் காங்கிரஸ் பிளவு

# ஹக்கீமை நீக்க ஜனாதிபதி சம்மதம் கட்சியை ஒன்றுபடுத்த பிரதமர் முயற்சி

(கொழும்பு)

முஸ்லிம் காங்கிரசிலிருந்து பிளவுபட்ட இரு அணிகளில் கட்சியிலிருந்து வெளியேற்றப்பட்ட ஏ.எல்.எம்.அதாவுல்லா தலைமையில், பதினொரு பேர், முஸ்லிம் காங்கிரசின் அரசியல் உயர்பீடம் என்ற பெயரில் கலதாரி ஹோட்டலில் கூடி சில தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர்.

அப்பிரிவின் தீர்மானங்களுக்கமைய கட்சியின் தேசிய அமைப்பாளராக ஏ.ஜே.எம்.முஸாமிலையும், ஹக்கீமினது இடத்துக்கு கட்சித் தலைவராக எவ்.சுபைதீனையும், பொதுச்செயலாளர் மற்றும் கட்சித் தவிசாளராக முறையே ஹவ்ரத் மற்றும் ஏ.எல்.எம்.அதாவுல்லா ஆகியோர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

கட்சியின் உறுப்புரிமையில் இருந்தும் அமைச்சர் பதவியில் இருந்தும் ரவூப் ஹக்கீமை நீக்குவதாகவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கட்சியின் அரசியல் உயர்பீடமே அமைச்சர் பதவியைத் தீர்மானிக்கும் அதிகாரம் கொண்டதெனவும் அங்கு கூறப்பட்டது. இதற்கமையவே ஹக்கீமைக் கட்சியின் உறுப்புரிமையில் இருந்தும் அமைச்சர் பதவியில் இருந்தும் நீக்குவதற்காகவும் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. அதாவுல்லாவும் அவரது அரசியல் உயர்பீட ஆதரவாளர்களும் ஜனாதிபதியைச் சந்தித்து, ஹக்கீம் தனது தனிப்பட்ட அரசியல் பலத்தினை வைத்துக் கொண்டு, கட்சியின் செயற்பாடுகளைக் கட்டுப்படுத்துவது உட்பட மற்றும் வேறு 36 குற்றச் சாட்டுக்களையும் கூறியுள்ளனர். மேலும், கட்சியின் யாப்பு விதிக்கமையத் தாம் இரண்டு வாரத்தில் அமைச்சர் பதவிக்கு கட்சியில் ஒருவரை நியமிப்பதாக கூறியுள்ளனர். இதனை ஜனாதிபதி சந்திரிகாவும் ஏற்றுக் கொண்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

அதேவேளை, ஹக்கீமிற்கு ஆதரவான அரசியல் உயர்பீட அங்கத்தவர்கள் கட்சியின் தலைமைக் காரியாலயமான தாருஸ்லாத்தில் கூடி, ஹக்கீம் எடுத்த முடிவுகள் சரியானது என்பதுடன் அதாவுல்லா, ஹவ்ரத் ஆகியோரை கட்சியின் அங்கத்துவத்திலிருந்தும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்தும் நீக்குவதற்கான தீர்மானத்தினை எடுத்துள்ளனர். ஹக்கீமினது ஆதரவாளர்களில் முஸ்லிம் காங்கிரசினது நாடாளுமன்ற உறுப்பினர்கள் 6 பேரும் அங்கு சமுகமளித்திருந்தனர்.

இதேவேளை, கட்சியிலிருந்து நீக்கப்பட்ட முஸ்லிம் காங்கிரசின் நாடாளுமன்ற உறுப்பினர்களான - அதாவுல்லாவும் ஹவ்ரத்தும், நேற்று நாடாளுமன்றத்தில் தமது ஆசனங்களில் இருந்ததையும் காணக்கூடியதாக இருந்தது.

இன்று காலை ஹக்கீம் கொழும்பு திரும்பியதும் மீண்டும் தாருஸ்லாத்தில் அரசியல் உயர்பீடம் கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்நிலையில் முஸ்லிம் காங்கிரசின் விவகாரம் நீதிமன்றம் வரை கொண்டு செல்லப்படும் எனவும் கொழும்பில் தகவல்கள் வெளியாகியுள்ளன.

அதேவேளை பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவும் அமைச்சர்களான டாக்டர் ஜயலத் ஜயவர்த்தன, மஹிந்த சமரசிங்க ஆகியோர் முஸ்லிம் காங்கிரசின் பிளவினை சமரச முயற்சிகளின் மூலம் தீர்த்து வைக்க முயன்று வருகின்றனர்.

இது இவ்வாறிருக்க வரும் இரண்டு, மூன்று தினங்களில் முஸ்லிம் காங்கிரஸ், யாருடைய தலைமையின் கீழ் தொடர்ந்து இயங்கும் என்பது தெளிவாகிவிடும் என்றும் ஆனால் பிளவு தவிர்க்கமுடியாதது என்றும் முஸ்லிம் காங்கிரஸிற்கு நெருக்கமான வட்டாரங்கள் நமது ஈழநாட்டுக்குத் தெரிவித்தன.

(01)

## குருநகர்....

போது குருநகர் மீனவர் சங்கப் பிரநிதிகளும், கொழும்புத்துறை மீனவர் சங்கப்பிரதிநிகளும் வட மாகாண கடற்தொழில் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தலைவர் தவரட்ணமும் உடனிருந்தனர்.

இக்கலந்துரையாடலின்போது குருநகர் மீனவர் சங்கப் பிரதிநிதிகள் - இறங்குதுறையைக் கட்டுப்பாடுகள் இன்றித் திறந்துவிடும்படியும், குருநகர் கடற்கரையோரத்தில் இராணுவத்தின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கும் வீடுகளில் மக்கள் மீளக் குடியமர அனுமதி வழங்கும்படியும், குருநகர் இறங்குதுறைக்கு அப்பால் பரந்த கடற்கரையோரத்தில் வள்ளங்களை நிறுத்துவதற்கு அனுமதிக்கும்படியும் அமைச்சர் மகேஸ்வரன் ஊடாக இராணுவத்தினரிடம் கோரிக்கை விடுத்தனர். இக்கோரிக்கைகளுக்கு சற்றேனும் விட்டுக் கொடுக்காமல், பிரிகேடியர் ரி.ரி. சில்வா இவற்றை ஏற்க மறுத்ததுடன், இவை குறித்து இறுதி முடிவு எடுக்கும் பொறுப்பு பாதுகாப்பு அமைச்சர், கடற்படைத்தளபதி, பிரதமர், ஜனாதிபதி ஆகியோருக்கே உரியது எனவும் தெரிவித்தார்.

பின் அமைச்சர் மகேஸ்வரன் இராணுவ அதிகாரிகள் சகிதம் குருநகர் ஐஸ் தொழிற்சாலையையும் சீநோரையும் சென்று பார்வையிட்டதுடன், குருநகர் ஐஸ் தொழிற்சாலையை திறப்பதற்கு இராணுவம் அனுமதியளிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொண்டார்.

(லி)

# தமிழீழ நீதிமன்றம் திருமலையில் திறப்பு!

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தினர் தமது கட்டுப்பாட்டுப் பிரதேசங்களில் தமிழீழ நீதிமன்றங்களைத் திறந்துவருகின்றனர்.

திருகோணமலை மாவட்டத்துக்கான நீதிமன்றம் நேற்றுக்காலை 11.15 மணியளவில் மூதூர் கிழக்கு கட்டைபறிச்சான் என்னும் இடத்தில் திறந்து வைக்கப்பட்டது. இது 16 ஆவது நீதிமன்றம் ஆகும்.

பொதுச் சுடரினை காவல்துறை மேலாளர் அவைக்குமரன் ஏற்றி வைக்க தமிழீழ தேசியக் கொடியினைப் புலனாய்வுப் பொறுப்பாளர் நீதன் ஏற்றி வைத்தார். இதனைத் தொடர்ந்து நீதிமன்றத்தின் பெயர்ப் பலகையை போர்ர்ப்பயிற்சிக் கல்லூரி அதிபர் கில்மன் திறந்து வைத்தார். நீதிமன்ற அலுவலகக் கட்டடத்தை மகளிர் படைப் பிரிவுத் தளபதி காவேரி திறந்து வைக்க, நீதிமன்றத்தை திருகோணமலை நகர அரசியல் பொறுப்பாளர் வி. ராஜேஷ் நாடாவை வெட்டித் திறந்து வைத்தார்.

இதனைத் தொடர்ந்து நீதிமன்ற அமர்வுகள் ஆரம்பமாகின. திருகோணமலை மாவட்ட நீதிபதி மயூரன் வழக்கு விசாரணையை ஆரம்பித்தார்.





நீதிமன்றத்தைத் திறந்து வைக்கும் ராஜேஷ் அவருடன் திலக் மற்றும் பிரமுகர்களை முதலாவது படத்திலும் நீதிமன்றக் கட்டடத்தைத் திறந்து வைக்கும் தளபதி காவேரியை இரண்டாவது படத்திலும் காணலாம்.

# நெடுந்தீவில் உண்ணாவிரதம்; நான்கு பேர் மயக்கமுற்றனர்!

(நெடுந்தீவு)

நெடுந்தீவிலிருந்து ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியினரை வெளியேறக் கோரும் போராட்டத்தில் ஈடுபட்டவர்களில் நான்கு பேர் நேற்று மயக்கமுற்றுள்ளனர்.

நெடுந்தீவில் மேற்கொள்ளப்பட்டு வரும் மேற்படி எதிர்ப்பு நடவடிக்கையின்போது, உண்ணாவிரதம் இருந்து வந்தவர்களான க.லோகநாதன், அ.அன்பு, எஸ்.ஞானநட்சத்திரம், பி.அமல்ராஜ், ஆகியோரே நேற்றைய தினம் காலை 11 மணியளவில் மயக்கமடைந்தனர். இவர்கள் உடனடியாக நெடுந்தீவு மாவட்ட வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டு அங்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

அதேவேளை நெடுந்தீவுப் பகுதிக்கு நேற்றுப் போர் நிறுத்தக் கண்காணிப்புக் குழுவினர் சென்று பார்வையிட்டனர். மக்களின் போராட்டம் தொடர்ந்தும் நடாத்தப்பட்டு வருகிறது. (112,113)

# யாழ். பொறியியல் பீடம் நேற்று மூதவையில் ஆராய்வு!

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழகத்தில் பொறியியல் பீடம் அமைப்பது தொடர்பான விடயங்கள் குறித்து பல்கலைக்கழகத்தின் மூதவையில் ஆராயப்பட்டுள்ளது.

யாழ். பல்கலைக்கழகத்தில் நேற்று மூதவையின் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் பொறியியல் பீடத்தை அமைப்பது தொடர்பான விடயம் குறித்து நீண்ட நேரம் விவாதிக்கப்பட்டது.

பேராசிரியர் குமாரவடிவேல் மேற்படி கற்கைபீடம் அமைப்பது தொடர்பான ஆரம்பநிலை அறிக்கையை நேற்று மூதவையில் சமர்ப்பித்தார். இவ்வறிக்கை தொடர்பாக உறுப்பினர்கள் பலரும் பல்வேறு கருத்துக்களைத் தெரிவித்து உரையாற்றினர்.

(க)

# மரண அறிவித்தல்

## திருமதி செல்லையா சின்னம்மா

தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகவும் பன்னாலையை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி செல்லையா சின்னம்மா அவர்கள் (02.12.2002) திங்கட்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வைத்திலிங்கம் கதிரிப்பிள்ளை தம்பதிகளின் பாசமிகு மகளும், காலஞ்சென்ற செல்லையா அவர்களின் அருமை மனைவியும், காலஞ்சென்ற கனகசபை, தங்கப்பிள்ளை, வள்ளியம்மை ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற கனகசபை, தங்கமுத்து, கணபதிப்பிள்ளை ஆகியோரின் மைத்துனியும், சிவபாலன், மகேஸ்வரி (கொழும்பு), சண்முகசுந்தரம் (கொழும்பு), லலிதாதேவி, தவமணிதேவி ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேஸ்வரி, குமாரதேவி, மகேஸ்வரன், சோமசுந்தரம் ஆகியோரின் மாமியாரும் பகீரதன் (சிங்கப்பூர்), திருமதி சிவரதி கேதீஸ்வரன் (அவுஸ்திரேலியா), திருமதி கலைச்செல்வி முரளிதரன் (U.K.), நளாயினி, பகவதி, வாகீஸ்வரி, தர்ஷினி, மகிந்தன், கமலதாஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (03.12.2002) செவ்வாய்க்கிழமை காலை 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பன்னாலை கேணிப்பிட்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:-
செ.சிவபாலன் (மகன்),
க.மகேஸ்வரன் (மருமகன்).

*பன்னாலை,*
*தெல்லிப்பளை.*

(055)

# மாவீரர் துயிலும் இல்லங்கள்; ஆய்வு செய்யும் இத்தாலிய அறிஞர்

(யாழ்ப்பாணம்)

மாவீரர் துயிலும் இல்லங்கள் தொடர்பான மானுடவியல் ஆய்வு ஒன்றை இத்தாலியப் பேரறிஞர் நடாத்தவுள்ளார்.

மேற்படி ஆய்வை நடாத்துவதற்காக இத்தாலி நாட்டைச் சேர்ந்த பெண் பேரறிஞர் ஒருவர் யாழ்ப்பாணத்துக்கு வருகை தந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் தற்போது தங்கியிருக்கும் இவர் பலதரப்பட்ட மக்களையும், பிரமுகர்களையும் சந்தித்து இவ்விடயம் தொடர்பான விபரங்களைத் திரட்டி வருகிறார்.

வடக்கில் உள்ள அனைத்து மாவீரர் துயிலும் இல்லங்களையும் பார்வையிடுவதற்கும் இவர் திட்டமிட்டுள்ளார். மேற்படி விடயங்கள் தொடர்பான மானுடவியல் சார்ந்த விடயங்களிலும், வரலாற்று ரீதியான விடயங்களிலும் அதிக கவனம் செலுத்தித் தகவல் திரட்டி வருகிறார்.

இதேவேளை - இலங்கையில் இன முரண்பாடுகளும் சமாதான முயற்சியும் என்ற விடயம் தொடர்பாக ஆய்வு செய்வதற்காக சுவீடன் நாட்டின் உப்சலா பல்கலைக்கழகத்தின் இரு விரிவுரையாளர்கள் யாழ்ப்பாணம் வருகை தந்துள்ளனர்.

சில தினங்கள் யாழ்ப்பாணத்தில் தங்கியிருந்து மேற்படி ஆய்வுப்பணிகளை மேற்கொள்ளவுள்ளனர். இதற்காக யாழ்ப்பாணத்தில் பலதரப்பட்ட மக்களையும் முக்கியஸ்தர்களையும் இவர்கள் சந்தித்து வருகின்றனர். (க,லி)

# நாணய மாற்று விகிதம்

மத்திய வங்கியின் சர்வதேச நடவடிக்கைப் பணியகத்தால் நேற்று வெளியிடப்பட்ட அந்நியச் செலவாணிகளுக்கான நாணய மாற்று விகித விவரங்கள் வருமாறு:

| | கொள்வனவு விலை (ரூ.ச.) | விற்பனை விலை (ரூ.ச.) |
|---|---|---|
| 1 அமெரிக்க டொலர் | 96.28 | 96.74 |
| 1 ஸ்ரேலிங் பவுண் | 149.59 | 150.92 |
| 1 யூரோ | 95.21 | 96.31 |
| 1 சுவிஸ் பிராங் | 64.59 | 65.39 |
| 1 அவுஸ்திரேலிய டொலர் | 53.50 | 54.49 |
| 1 ஜப்பானிய யென் | 00.77 | 00.78 |
| 1 சவூதி றியால் | 25.77 | 25.77 |

இப்பத்திரிகை - இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 03.12.2002 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.